www.tamilarangam.net

# அக்கினிக் குஞ்சு

புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் சர்வதேச கலாசார - இலக்கிய மாசிகை



யாழ். எஸ். பாஸ்கர்

siva

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

With the best compliments from :

# RAVI, JAMES & ASSOCIATES

BARRISTERS & SOLICITERS

*All legal work including..........*

**FAMILY LAW**
**IMMIGRATION**
**PERSONNEL INJURIES**

WORK CARE
GENERAL / COMMERCIAL LITIGATION
CONVEYANCING

**SALES / PURCHASE BUSINESS**
**LEASE, WILLS AND PROBATE**
**INSURANCE & FINANCIAL SERVICES**

**The expertise to help you with all your legal, insurance and financial needs**

□

Telephone : 388 2091 Fax : 388 2092

558, Sydney Road,
Brunswick, Vic 3056
Australia

Contact : S, RAVEENDRAN - A. H. 497 3738

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அக்கினிக்குஞ்சு

புலம் பெயர்ந்த ஈழத் தமிழரின்
சர்வதேச கலாசார இலக்கிய மாசிகை
பிரதம இலக்கிய ஆலோசகர் :
எஸ்.பொ
ஆசிரியர்:
யாழ் . எஸ்.பாஸ்கர்
துணை ஆசிரியர்கள்:
ரி.தர்மகுலசிங்கம்
இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்
அவுஸ்ரேலியா
பிரியா பப்ளிகேஷன்ஸ்ஸுக்காக
ஏ ஆர் பிரிண்ட்ஸ் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
எம்.ஏ. ரஹ்மான்



கதைகளிலேவரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே; கட்டுரையாசிரியரின் கருத்துக்கள், 'அக்கினிக்குஞ்சு'வின் கொள்கையை பிரதிபலிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.



INTERNATIONAL CULTURAL AND LITERARY MONTHLY OF DISPLACED EELAM THAMILS
Chief Literary Advisor : Espo
Editor : Yal S.BASKAR
Australia
(03) 555 - 3230
Deputy Editors:
T. Tharmakulasingam
DENMARK
(75) 588- 512
Ilampirai M.A.Rahman
MADRAS- INDIA
P.P. 420011.
Correspondence contribution & subscription address
PRIYA PUBLICATIONS ▢ P.O.BOX 470
▢ MOORABBIN ▢ VIC -3189 ▢ AUSTRALIA

நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்


# அகதி



Cover Courtesy AUSTCARE

என் அன்பு மகனே,
நாம் சொந்த நாட்டில் இல்லை.
உன் அங்க அசைவுகளைக் கண்டு
பொங்கிப் பூரிக்க
பெற்றவனும் இல்லை;—பிற சுற்றங்களும் இல்லை.
வீடு இல்லை; வேலி இல்லை;
வெக்கைக்கு நிழல்தந்த மரங்களும் இன்றில்லை.
கோயிலில்லை குளமில்லை,
கொண்டாட எமக்கு திரு
விழாக்களும் இல்லை.
என்றாலும் என் அன்பு மகனே
பசி என்று நீ பதறிடத் தேவையில்லை.
சொந்த நாட்டில்
சுகித்திருந்த வேளையில்—என்
முலைகளிலே சேமித்த முதல் உண்டு.
நிறை யுணவு மட்டுமல்ல;
நீ தப்பவிட்ட எங்கள்
கலைகள் கலாசாரங்கள்
பண்புகள் எல்லாம் ஊறி வரும்.
உறிஞ்சிக் கொள்.
'ஹெலி'யின் இரைச்சலும்
சப்பாத்து ஒலிகளும் அடங்கி
பின்னர் ஒருநாள் உன்
பெற்றோர் பிறந்த நாட்டில்
போயிறங்கு...
அப்பொழுது புரியும் உனக்கு
உன் நிலம்,
மக்கள்,
உரித்து
எவையென்று!

—ஒரு தமிழீழ அபலைத் தாய்

www.tamilarangam.net

# மனம்விட்டுப் பேசுவோம்

**யாழ்.எஸ்.பாஸ்கர்**

அக்கினிக் குஞ்சுவின் மூன்றாவது இதழை, இதோ உங்கள் கரங்களிலே வைக்கின்றோம். ஒவ்வொரு இதழின் பிறப்பும் ஒவ்வொரு பிரசவம். எதிர்பார்ப்புகளும், அதே சமயம் வேதனைகளும் அப்படி. இதழை உங்கள் கரங்களிலே வைத்ததும் ஒரு சுகம். தாய்மை சார்ந்த பெருமை. இந்தப் பெருமைமுழுமையானதல்ல என்பதையும் நிதானிக்க முடிகின்றது. ஒவ்வொரு இதழுக்குமான விஷயங்களைச் சேகரித்து, அவற்றைக்கோவைசெய்து, அவற்றின் பிரசுர பக்கங்களை நிர்ணயித்து, அச்சிடுவதற்குச் சென்னைக்கு அனுப்பி, சென்னையில் அச்சிட்டு, அச்சிட்ட பிரதிகளை விமானச் சேவை மூலம் பல்வேறு நாடுகளின் நகரங்களுக்கு எடுத்துச் சென்று... அக்கினிக்குஞ்சுவை உரிய காலத்திலே கொண்டு வருவதில் நாம் எதிர் நோக்கும் இடர்களும் சிரமங்களும் அளப்பரியன. இருப்பினும் தவம் தொடர்கின்றது. யாகம் உரிய முறையிலே வளர்க்கப்படுகின்றது. இத்தனைக்கும் உந்து சக்தியாக அமைந்திருப்பது சத்தியத்தின் வெற்றியிலே நாம் பூண்டுள்ள அழுங்குப்பிடியான பற்றுதல் என்பதை இனங் காணுகின்றோம். ஈழத் தமிழர் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அனுபவிக்கும் துயர்கள் நெடியன. அந்தத் துயர் துடைக்கும் எத்தனத்தில் நமது பணி சங்கமிக்கின்றது என்பது நமது தேற்றம். ஆகுதி இன்றி, ஓம குண்டத்திலே அக்கினி செழித்து வளர்வதில்லை. தியாகங்களின்றிச் சேவைகள் புனிதமடைவதில்லை. 'அக்கினிக் குஞ்சு'வைக் கிரமமாகக் கொண்டு வருவதில் நாம் இயற்றும் தியாகங்களை இங்கு பட்டியல் போட்டு, தியாகத்தின் புனிதத்துவத்தைச் சோரப்படுத்த ஒப்போம். இருப்பினும், நமது சொந்த இன்பங்களையும் சௌகரியங்களையும் பிறிதோர் இலட்சிய பூர்த்திக்காக இழத்தலும், சுயம்புவான தன்னல மறுப்பும் தியாகத்தின் சில கோலங்களே என்கிற தெளிவு நமக்கு உண்டு. ஓலங்களும் பிலாக்கணங்களும் கொச்சையானவை. பணிகளிலே கொச்சைகளைத் தவிர்ப்போம். மிச்சிலாகத் தேறும் பெருமையைப் பாராட்டுவோம். இதனாலும், தாய்மை சார்ந்த பெருமை என்றோம்.

இருப்பினும், 'அக்கினிக் குஞ்சு'வைக் கிரமமாக வெளியிடுவதில் உள்ள சிரமங்களை உங்களுடன் பங்கிட்டுக் கொள்ளுதல் நேர்மையின்பாற்படும் என்கிற அறிப்பும்! வெற்றி சார்ந்த பெருமைகளைப் பிரசித்தம் செய்யும் உரிமை நமக்கு இருக்குமானால் நமது கஷ்டங்களை அறிந்து கொள்ளும் உரிமை உங்களுக்கும் உண்டு என்று நீங்கள் பாத்தியதை கொண்டாடுதல் நியாயமானது. பொதுப்பணி என்று வந்துவிட்டால், அதற்குச் சில வரையறுத்த இலட்சணங்கள் உண்டு. நாங்கள் உங்கள் சார்பாகச் செயல்படுதல் மட்டும் பொதுப்பணியாக மாட்டாது. உங்கள் சார்பாக என்று ஒரு தலைப்பட்சமாக உரிமைஎடுத்து கொள்ளுதல், தனி மனித உறவுகளையும் - ஜனநாயகப் பண்புகளையும் - சங்கை நட்டஞ் செய்யும் இராக்கதப் போக்காகவே நமக்குப் படுகின்றது. உங்கள் சார்பாக அல்லாமல், உங்களையும் இணைத்ததாகப் பொதுப் பணி அமைதல் ஆரோக்கியமானது. அது சங்கையானது. பொதுப்பணி என்று வந்துவிட்டால் ஒரு வகை accountability இருத்தல் நாணயஞ் சார்ந்தது.

'அக்கினிக் குஞ்சு' வின், மூலக் கோலத்தினை இந்த மூன்று இதழ்களிலே நீங்கள் ஓரளவுக்கேனும் இனங் கண்டிருப்பீர்கள். இது ஒரு business venture அல்ல; நிச்சயமாக இல்லை. பணம் இலகுவாகச் சம்பாதிப்பதற்கு வேறு வழிகள் உள. புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுடைய இலட்சிய தாபங்களை பிரீதி செய்யும் பத்திரிகை ஒன்றினை வியாபார நோக்கிலே நடத்தலாம் என்று நினைப்பவன் பைத்தியக்காரன். ஈழத் தமிழர்தம் தனித்துவ கலாசார இலக்கியப் பாரம்பரியங்களைப் பேணுதல் வேண்டும் என்கிற நேசிப்பிலே நாம் பைத்தியக்காரர்களாக இருந்த போதிலும், அதனை வியாபாரமாக்கலாம் என்று நினைக்கக்கூடிய படுபைத்தியங்களல்ல. புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுடைய கலாசார இலக்கியப் பாரம்பரியங்களின் சேமங்களைப் பேணுவதற்கு ஒரு தமிழ் சஞ்சிகை வெளி வருதல் வசதியான வாகனம் என்று உங்களிலே பலர் சத்தியமாகவே யோசித்திருப்பீர்கள். உங்களுடைய எண்ணங்களுக்கு ஓர் உருவம் கொடுக்கும் எத்தனத்தில் இறங்கினோம் விளைவு: அக்கினிக்குஞ்சு! எங்களுடையது மட்டுமல்ல; உங்களுடையதும். எனவே, நமது! உங்களுடைய சகல விதமான உதவிகளும், அனுசரணைகளும் சங்கமித்தாற்றான் அக்கினிக் குஞ்சு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேமமான வளர்ச்சியைக்காணும். எங்களுடைய ஈடுபாடிலும் மேலான ஈடுபாடு உங்களிடமிருந்து அக்கினிக்குஞ்சுவின் வளர்ச்சிக்குத் தேவை என்பதை நாம் நிச்சயமாக உணருவோம். உங்களுடைய ஈடுபாட்டின் சங்கமம் 'அக்கினிக் குஞ்சு'வின் நாணயமான கணக்குக் காட்டலுக்கும் தோற்றுவாயாக அமையும்.

'அக்கினிக் குஞ்சு'வை வெளியிடுவதிலே நானும் என்னுடைய இரண்டொரு அத்தியந்த நண்பர்களும் கைகளை முழுமையாக சுட்டுப் பொசுக்கிய பிறகு, உங்களுடைய உதவிகள் கிடைப்பதால் பயன் யாது? பயிர் வளரும் பொழுதுதான் அதற்கு நீர்பாய்ச்சுதல் தேவை. பட்டுப் போன பயிருக்கு நீர் பாய்ச்சி யாது பயன்? காலத்தால் இயற்றப்படுவதுதான் உதவி. எனவேதான், உரிய காலத்திலே உங்களுடைய பங்களிப்பினை உயரிய முறையிலே அளிப்பதற்கு முன் வாருங்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம். இதன் வளர்ச்சிக்கு நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதையும் நாம் விண்டு காட்டவும் வேண்டுமா? தானம் ஒருவனுடைய பொருள் வளத்தை மட்டும் பொறுத்தது அல்ல. ஒருவனுடைய அருள் நெஞ்சின் வளத்தையும் பொறுத்தது. கலை-இலக்கிய ஈடுபாட்டின் ஆழத்தைப் பொறுத்தது. இன-மான நேசிப்பினையும் பொறுத்தது. தானம் கொடுப்பவனின் நெஞ்சின் | நிறைவையும் பொறுத்தது. அதனை உங்கள் சுயாதீனத்திற்கு விடுதல் தர்மம்.

ஆனாலும், குறைப்பட்சம் நீங்கள் ஒவ்வொருவரும் 'அக்கினிக் குஞ்சு'வின் நிரந்தர வாசகனாக இருக்கும் ஈடுபாட்டினை வேண்டுகின்றோம்! 'அக்கினிக் குஞ்சு' வுக்கு ஓர் ஆண்டுக்குச் சந்தா செலுத்தி உங்கள் ஈடுபாட்டினைப் பதிவு செய்தல் உவகைக்குரியது. நீங்கள் மட்டுமல்லாமல், உங்கள் நண்பர்களையும், இனியவர்களையும் சந்தாதாரராகும்படி தூண்டலாம்; ஊக்கப்படுத்தலாம். இவை ஒவ்வொருவருடைய சக்திக்கும் உட்பட்ட பங்களிப்பாகும். ஒவ்வொரு நாட்டிற்குமான சந்தாவை நிர்ணயிப்பதிலும் சிரமம் உண்டு. தனிப்பிரதியின் விலை விபரம் தரப்பட்டுள்ளது. தனிப் பிரதியின் விலையும், தனிப் பிரதியின் உள்ளூர்த் தபாற் செலவுஞ் சேர்ந்தது தனிப் பிரதிக்கான சந்தா. ஓராண்டிற்கான சந்தா என்பது பன்னிரண்டு இதழ்களுக்கான கட்டணம். நீங்களும், உங்கள் மூலம் உங்கள் உடன் வட்டத்தினரும், 'அக்கினி குஞ்சு' வின் சந்தாதாரராவதின் மூலம் அக்கினிக் குஞ்சுவின் பொருளாதாரத்தளத்திற்கு உதவ உடனடியாக முன் வருதல் வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம். இதனால், உங்களுடைய இன-மான நேசிப்புக்கு உருபு வாய்ந்த அஞ்சலி செலுத்தும் வாய்ப்பும் உங்களுக்கு வந்து பொருந்துகின்றது.

'அக்கினிக் குஞ்சு'வின் இலக்கியத்தரத்தின் உயர்வுக்கும் உங்கள் பங்களிப்புத் தேவை. நமக்குத் தெரிந்த நண்பர்களே புலம் பெயர்ந்துள்ள ஈழத் தமிழர் மத்தியிலே இலக்கிய விற்பன்னராகத் திகழ்கின்றார்கள் என்று நாம் என்றும் நம்மை ஏமாற்றத் தயாராக இல்லை. நமக்குத் தெரிந்த ஒரு சிலருடைய 'அச்சேராத' எழுத்துக்களை அச்சிலே பார்த்துவிட வேண்டும் என்று 'சிறு சோறு' ஆக்கும் முயற்சியல்ல, 'அக்கினிக் குஞ்சு'வின் இலக்கியப் பணி. அதன் இலக்கிய இலக்குகள் உலகளாவியன. நமது மக்களுடைய இலக்கிய எழுச்சிகளின் அத்தனை வண்ணக் கலவைகளையும், அத்தனை ராக கோலங்களையும் வெளியிடும் அரங்கமாக 'அக்கினிக் குஞ்சு' அமைதல் வேண்டும் என்பதுதான் நமது இலட்சியம். உங்களுடைய ஆற்றல்களை நாம் அறியாமல் இருக்கலாம். நமது அறியாமையை மன்னிக்கவும். இஃது உங்கள் சங்கப் பலகை. உங்கள் ஆக்கங்களை நமக்கு அனுப்பிவையுங்கள். நமது பக்கங்கள் எல்லைகட்டுடையன.அது மாசிகை. இவற்றையும் நினைவில் வைத்து, உங்களுடைய ஆக்கங்களை அனுப்புங்கள். புதுமை. செம்மை. குறுக்கம். ஆழம். இந்தப் பண்புகள் உங்கள் ஆக்கஙங்களிலே பொருந்துதல் சிறப்புடைத்து. உங்கள் விஷய தானங்களினால் நம்மைத் திக்கு முக்காடச் செய்யுங்கள். வரவேற்கின்றோம்.

உங்களுடைய ஆற்றல்களுக்கும்-சக்திகளுக்கும் ஏற்ற உதவிகளைச் செய்து 'அக்கினிக் குஞ்சு'வுக்கு உங்களுடைய பங்களிப்பினைச் செய்வதின் மூலம், உங்களையும் இந்தப் பொதுப் பணியிலே சமத்துவ உரித்துள்ள பங்காளிகளாகச் சேர்ந்துகொள்ளும்படி யாசிக்கின்றோம். வெட்கப்படவில்லை. பொதுப்பணியிலே யாசித்தலும் பெருமைக்குரியது என நாம் கருதுகின்றோம்.

இன்னும் ஒன்று. 'அக்கினிக் குஞ்சு' சென்னையில் அச்சிடப்படுகின்றது. ஆனாலும், அதன் தலைமை நிலையம் அவுஸ்ரேலியாவில் அமைந்துள்ளது என்பதை மறக்காதீர்கள். எல்லாத்தொடர்புகளுக்கும்ஏற்ற முகவரி PIRYA PUBLICATIONS, P. O. BOX 470, MOORABBIIN, VIC-3189, AUSTRALIA என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தபாலில் ஏற்படும்தாமதங்களைப் போக்கவும் இந்த நினைவு வசதி செய்யும். ஒவ்வொரு நாட்டிற்கும் 'அக்கினிக் குஞ்சு ஆர்

-34 ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தியாவுக்கான ஒரு பிரார்த்தனை

'**தமிழராகிய** நாமும் மனிதர். சுதந்திரம் மனிதரின் பிறப்புரிமை. இந்தப் பிறப்புரிமையைச் சுகித்து, இலங்கையில் பன்னெடுங்காலமாக நாம் செறிந்து வாழும் தமிழீழப் பகுதியிலே, தாய் மொழி பயின்று, அதன் மூலம் சுதந்திரமாக நமது கருமங்களை ஆற்றும் உரிமையை நமக்கு வழங்குதல் நியாயம். நியாயம் தர்மமாகவும், சத்தியமாகவும் உயருதல் நேர்த்தி. எனவே, நம்மை-ஈழத் தமிழர்களை-மனிதர்களாக மதிக்கும் நேர்த்தியை நிறுவுவோம்.' கூட்டிக் கழித்துப் பார்த்தாலும், தமிழீழக் கோரிக்கையின் சாரம் இதுதான். தமிழீழ மக்களின் மனித உரிமைகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அவ்வளவுதான். இதனை விளங்கிக் கொள்வதற்கு பென்னம் பெரிய சித்தாந்த ஞானங்கள் தேவையில்லை. ஈழத் தமிழர்களுடைய மனித உரிமைகளை அங்கீகரித்தல், இந்திய நாட்டின் பூகோள இறையாட்சி நலன்களையோ, அன்றேல் இலங்கையின் பெரும்பான்மைச் சிங்களவர்களுடைய சுயாதின சுபீட்சங்களையோ எவ்வாறு சோரப்படுத்துகின்றது என்பது நமக்குப் புரியவில்லை. ஆதிக்கப் பேராசைகள் தர்மத்தில் வேரூன்றியவை அல்ல. மனித உரிமைகள் புனிதமானவை. எனவே, தர்மஞ் சார்ந்தன. பிறிதொரு வகையாகவும் விளங்கிக் கொள்ளலாம். ஈழத்திலே தமிழர்களாகப் பிறந்தமை நமது சேதநைப் பலிதமல்ல. இலங்கையில் சிறுபான்மையினராய் அமைந்தமை சுயமுயற்சிப்பலிதமுமல்ல. அடிமைகளாக உயிர் வாழ்வதிலும் பார்க்க, பீடுடன் வாழ்ந்த ஓர் இனத்தின் அழிவுக்குத் துணைபோகும் கோழைகளாக வாழ்வதிலும் பார்க்க அடிப்படை உரிமைகள் சுகிக்கும் மனிதர்களாகக் கெளரவத்துடன் வாழ்தல் வேண்டும் என எழுச்சி பெறுதல் பாவமா?

**பா**ண்டவர் போரைத் தேர்ந்தெடுத்ததில்லை. பார்த்தசாரதி தூதும் சென்றான். அநியாயமான மிகக் குறைந்த பட்சக் கோரிக்கைகூட முன் வைக்கப்பட்டது. ஆணவம் அதனைக்கூட நிராகரித்தது.ஏமாப்பு எக்காளமிட்டது. ஈற்றிலே போர் பாண்டவருக்குத் தர்மமாக விடிந்தது. ஈழத்தமிழராகிய நாம் ஒத்துழைத்தோம். ஒப்பந்தங்கள் செய்தோம். ஏமாப்பு இன படுகொலைகளை எக்காளமிட்டு நிகழ்த்தியது சிங்கள அரசு. இந்திரா அம்மையாரின் முயற்சியால் நவீன பார்த்தசாரதியின் தூதும் வாய்த்தது.ஈற்றில் போர் ஈழத்தமிழருக்கும் தர்மமாக விடிந்தது. இன்னொரு கட்டம். அன்றைய பாரதப் பிரதமர் ராஜீவ், வல்லரசு பாணியில், ஒப்பந்தம் ஒன்றினை ஈழத்தமிழர்கள் மீது திணித்தார். பல்லாயிரக்கணக்கான இந்திய ஜவான்களை ஈழ மண்ணிலே நிலைகொள்ளச் செய்தார். 'தமிழ் நாட்டில் வாழும் தமிழர்கள் அனுபவிக்கும் உரிமைகளுக்கும் மேலான உரிமைகளை ஈழத்தமிழர்களுக்குப்பெற்றுத் தந்துவிட்டோம்' என்று சென்னையில் வைத்து, முதல்வர் எம்.ஜி.ஆர். முன்னிலையில், உலகுக்கு அறிவித்தார். ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடந்தது. தமிழீழ முதலமைச்சர் ஒருவரும் உருவாக்கப்பட்டார். அவர் எங்கே? அவர் முகவரி என்ன? பாரத அரசு தந்த வாக்குறுதிகள் எங்கே? இதனைப் பற்றிப் பேசக்கூடிய சத்திய சீலர்கள் இல்லையா? இல்லையென்றால், ஏன்? இந்தியத் தலையீடு ஈழத்தமிழர்களுக்கு வெற்றியீட்டித் தந்த உரிமை என்ன? 'இந்த வெற்றியைச்சாதித்துத் திரும்பினோம்' என்று இந்திய அரசு தமது வரியிறுப்பாளர்களுக்குக் கணக்குக் காட்டியதா? இல்லையென்றால், ஏன்?

இந்த 'ஏன்' களுக்குப் பின்னால், அசத்தியர்களும் சந்தர்ப்பவாதிகளும் கரைந்துறைகின்றார்கள். சிறியாரை வலியார் வருத்தினால், அந்த வலியாரை தெய்வம் ஒறுக்கும் என்பது இந்தக் கலிகாலத்திலும் பொருந்துமா? இருப்பினும் இந்திய அரசியல், உலகமே இரங்கத்தக்க விதத்தில் நாறுகின்றது. இது ஈழத்தமிழர்களுக்கு கவலை தருகின்றது. நமக்கு விடிந்துள்ள தர்மத்தை ஏற்றுள்ளோம். அதே சமயம், பாரத நாட்டின் அரசியல் விமுக்திக்காகப் பிரார்த்தனை செய்யும் விசாலித்த பண்பும் ஈழத்தமிழர்களுக்கு உண்டு. இந்திய இறைமையின் நலனுக்குப் பிரார்த்திப்போமாக!

## இருதலைக் கொள்ளியினிடையே

ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப்பந்தின் கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய
தமிழச் சாதி, தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடும் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலையுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெல்லாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்;



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சென்னைக் கடிதம்

## இரண்டே ஆண்டுகளில் இன்னொரு தேர்தல்

சென்னையிலும் இந்தியாவின் இதர பகுதிகளிலும் மக்களின் கவனத்தை கவர்ந்திருப்பது இந்திய நாடாளுமன்றத்தின் ஓரங்கமான மக்களவைக்கும், தமிழ் நாடு உள்ளிட்ட ஐந்து மாநில சட்ட மன்றங்களுக்கும் மே 20, 23, 26 தேதிகளில் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தல்தான். இந்திய பொதுத்தேர்தல் என்பது நமக்கு அக்கறை உள்ள விஷயம். இத்தேர்தல் முடிவுகள் ஈழத்தமிழர் வாழ்விலும், வளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால் நாம் இதில் ஆர்வம் காட்டாமல் இருக்க முடியுமா? வரும் தேர்தலை பொதுத்தேர்தல் என்பதைவிட இடைத்தேர்தல் என்பதே பொருத்தமாக இருக்கக்கூடும்.

இந்தியாவில் பொதுத்தேர்தல் நடந்து 19 மாதங்களிலும் தமிழ் நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் நடந்து 28 மாதங்களிலும் மற்றொரு தேர்தல் வந்துவிட்டது.

தேசிய அளவில் அடுத்து ஆட்சிக்கு வர ராஜீவ் காந்தியின் காங்கிரஸ், வி.பி.சிங்கின் தேசிய முன்னணி, எல். கே. அத்வானியின் பா. ஜ. க., சந்திரசேகரின் சமாஜ்வாடி ஜனதாதளம் ஆகிய நான்கு கட்சி கூட்டணிகள் பந்தயத்தில் இறங்கி விட்டன. வெற்றி வாய்ப்பைப் பொறுத்தவரை சந்திரசேகர் அவுட். அயோத்தி ராமர் கோயிலை அரசியலாக்கி அத்வானியின் பா. ஜ. க. என்ற மதவாதக் கட்சி வட இந்தியாவில் பூதாகரமாக வளர்ந்து விட்டது. "இந்தியா இந்துக்களுக்கே'' என்று வாதிடும் மதவாதக்கட்சியான பா. ஜ. க பூர்வாசிரமத்தில் ஜன சங்காக இருந்தது.

சாதி அரசியலை முன் வைத்து மீண்டும் பதவிக்கு வர வி. பி. சிங் முனைப்புடன் செயல்படுகிறார். கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டவர் அவர்.

இந்திய அரசியலைப் பொறுத்தவரை பந்தயத்தில் முந்தி நிற்பது என்னவோ ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் தான்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையின் அடிப்படை பற்றி எதுவுமே தெரியாதவர் வி. பி. சிங். "எல்லாம் தெரிந்தவர்'' ராஜீவ் காந்தி. இலங்கைத் தமிழருக்கு பிரச்சினைகள் உண்டு என்பதையே அறியாதவர் சந்திரசேகர். இந்த மூவரும் இந்திய பிரதமர் 'என்ற அரியாசனத்தில் வீற்றிருந்த காலங்களில் எத்தனை வகையான துன்பங்களை ஈழத்தமிழர் அனுபவிக்க வேண்டியிருந்தது என்பது நாடறிந்த சேதி.

இந்தியத் தேசிய அளவில் எப்படி நான்கு அணிகள் தேர்தல் களத்தில் வியூகம் வகுத்து நிற்கின்றனவோ அப்படியே தமிழ்நாட்டிலும் நான்கு அணிகள் பந்தயத்தில் இறங்கியுள்ளன.

காங்கிரஸ் ஆதரவிலான அ. தி. மு. க. வின் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஒரணி. தி. மு. க.வை உள்ளடக்கிய தேசிய முன்னணி சார்புக் கட்சிகளின் கூட்டணி மற்றோர் அணி.

தமிழ்நாட்டில் இந்த இரு அணிகளின் பலத்தைக் குறைப்பதற்கென்றே களத்தில் இறங்கியுள்ள மற்றிரு அணிகளில் ஒன்று சாதி அடிப்படையிலான வன்னியர் சங்கத்தின் பாட்டாளிமக்கள் கட்சி தலைமையிலான அணி. மற்றது சந்திரசேகரின் சமாஜ்வாடி ஜனதா தளத்தின் ஆதரவுடன் உள்ள நடிகர் டி. ராஜேந்தர் தலைமையிலான 13 கட்சிகளின் கூட்டணி.

இந்த அணிகளில் சம்பந்தப்படாத உதிரிக் கட்சிகளும் உண்டு. அவற்றில் பா.ஜ.க. வும் ஒன்று. 100 இடங்களில் போட்டியிடுகின்றதாம்.

கொளுத்தும் கோடைவெயிலின் கொடுமை போதாது என்று அரசியல் கட்சிகளின் அனல் பறக்கும் பிரசாரம் வேறு தமிழகத்து மக்களை தவிக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

மக்களைப் பொருத்தவரை அவர்களிடம் தேர்தலில் அளவு கடந்த உற்சாகம் இருப்பதாகத் தெரியவில்லை.

'நீதி கேட்போம், நியாயத்துக்காக போராடுவோம்' என்ற முழக்கத்துடன் கிளம்பியுள்ள கருணாநிதிக்கு ஆதரவாக, அவரது ஆட்சி 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தமிழக மக்களின் தீர்ப்பு அமையுமா?

அல்லது ஆட்சித்துறையில் முன் அனுபவம் இல்லாத தனது தனிப்பட்ட செல்வாக்கில் கர்வம் உள்ள, எம். ஜி. ஆரின் பெயரையும் தனது கவர்ச்சியையும் மட்டுமே நம்பியுள்ள, எதிர் கட்சித் தலைவி என்ற பொறுப்பையே சரிவர நிறைவேற்றாத ஜெயலலிதா தி. மு. க. வுக்கு எதிராக கூறும் குற்றச்சாட்டுகளை ஏற்று அவரை முதலமைச்சர்

**எஸ். எம். கார்மேகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத் தமிழர் அகதி முகாம்



## தேத்தாக்குடி வடக்கு

## தஞ்சை மாவட்டம்

**தேத்தாக்குடி வடக்கு** அகதிகள் முகாம், தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தாலுக்காவில் அமைந்துள்ளது. இங்கு நடந்த ஒரு படிப்பகத் திறப்பு விழாவுக் காகக் கடந்த 5-4-91 ல் நாங்கள் அங்கு சென்றிருந்தோம்.

படிப்பகத்தைத் திறந்து வைக்கும் பணியை திரு.அரு. கோபாலன் அவர்கள் ஏற்றிருந்தார்.

ஏப்ரல் 4ந் தேதி இரவு 10 30மணிக்குசென்னையிலிருந்து 'திருவள்ளுவ'ரில் நாம் புறப்பட்டோம்.40 கி. மீட்டர் தொலைவிலுள்ள நாகபட்டணம் போய், அங்கிருந்து வேதாரண்யம் பஸ் மூலம் தேத்தாக்குடி முகாம் போகவேண்டும்.

அன்று நாங்கள் பயணித்த 'திருவள்ளுவ'ருக்கு சிதம்பரம் தாண்டியதும் உடல் நிலை சரியில்லாமல் போகவே கொஞ்ச நேரம் நாங்களும் வழியில் 'அகதி'களானோம்! வேறு வண்டியைப் பிடித்து நாகையை அடைய அடுத்த நாள் காலை 9 மணியாயிற்று.

நாகையிலிருந்து வேதாரண்யம் போகக் காத்திருந்த 'சோழ'னில் ஏறி, அன்னை வேளாங்கண்ணி தாண்டி கள்ளிமேடு வந்தால் அங்கே, சாலையைப் பிளந்து பாலம் அமைக்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. நடுவழியில் 'சோழன்' எங்களை இறக்கிவிட, கொஞ்சம் தூரம் நடந்து அங்கு காத்திருந்த இன்னொரு 'சோழ'னில் ஏறி 4 கிலோ மீட்டர் பயணித்து தேத்தாக்குடி சேர்ந்தோம். பிரதானசாலையிலிருந்து முகாம் அரைமைல் தொலைவில் இருந்தது. சித்திரை வெய்யில் சீற்றம் மண்டையைப் பிளக்க முகாமை அடைந்தோம். பாலைவன வெளியொன்றில் தேத்தாக்குடி முகாம் வியர்த்துக் கொண்டிருந்தது.

இருநூறு ஓலைக் கொட்டகைகள். ஒவ்வொன்றும் 15x10 அடி அளவில் போடப்பட்டிருந்தது. மொத்தம் 290 குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டிருந்தனர். ஆண்கள் 464. பெண்கள் 431. குழந்தைகள் 283.

பெரும்பாலானோர் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பங்களின் தொகை மிகக் குறைவு.

அனைவரும் வள்ளங்கள்

---

பதவியில் அமர்த்தப்போகிறாரா? என்பது இப்போது கேள்விக் குறியாக உள்ளது.

இந்தக் கேள்விக் குறிக்குக் கூட இதுவரை இடமில்லாமல் இருந்தது. ஜெயலலிதாதான் அடுத்த முதலமைச்சர் என்று எல்லோரும் கூறிவந்தார்கள். ஆனால் அவர் தன்னிஷ்டத்திற்கு வேட்பாளர்களை நியமித்து ஆங்காங்கே அவரது அ.தி.மு. கழகத்துக்குள் அதிருப்தியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து விட்டதாலும், அ. தி. மு. க வேட்பாளர்களின் நியமனம் மட்டுமின்றி அதன் தோழமைக் கட்சியான இ. காங்கிரஸின் வேட்பாளர் பட்டியலில் எதிர்ப்புக் குள்ளாகியிருப்பதாலும் நிலைமை தி. மு. கவுக்கு சாதகமாக, அமைந்து விடுமோ என்று நம்புபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் ஜெயலலிதா எம். ஜி. ஆர். அல்லர் என்பவர்கள். ஆனால் ஜெயலலிதா செல்லும் இடம் எல்லாம் திரளும் கூட்டத்தைப் பார்த்தால் ஜெயலலிதா எம். ஜிஆர் அல்லர் தான். ஆனால் அவரைவிடவும் மேலாக அல்லவா தெரிகிறார்.

தமிழ்நாட்டைப் பொருத்த வரை தி. மு. க அ. தி. மு. க. காங்கிரஸ் என்பன ஓரளவு சம பலமுள்ள கட்சிகள். இவற்றில் எந்த இரண்டுகட்சிகள் ஒன்று சேர்கின்றனவோ அவற்றின் வெற்றி வாய்ப்பு உறுதி என்பது தான் கடந்த கால வரலாறு. அந்த வரலாறு திரும்புமா? மே 26ம் தேதி தமிழ் நாட்டில் வாக்குப் பதிவு நடக்கும் போது இதற்கு பதில் கிடைத்துவிடும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை தி. மு. க. வும் சரி அ. தி. மு. க. வும் சரி இம்முறை தங்கள் தேர்தல் அறிக்கைகளில் அடக்கியே வாசித்திருக்கின்றன.

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தக்கட்சிகள் கையாண்ட முறைகுறித்து தமிழக மக்களுக்கு அபிப்பிராய பேதம் உண்டு என்று உணர்ந்து தான் அவ்விரண்டு கட்சிகளும் அவ்வாறு செய்திருக்குமோ? □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோணிகள் மூலமாக தமிழ்நாட்டுக்கு வந்ததாகக் கூறினார்கள். அரசாங்க ஊழியர்கள், விவசாயம் - மீன்பிடி - வியாபாரம் முதலிய சுயதொழிலாளர்களெல்லாம் முகாமில் கலந்து இருந்தார்கள். மாணவ, மாணவிகளும் கணிசமான தொகையில் காணப்பட்டனர்.

துன்பம்-கஷ்டங்கள் மத்தியிலும் நிலைதளராத உறுதி மிக்க இளைஞர்கள் தங்களுக்குள் ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி பயனுள்ள தொண்டுகளைச் செய்து வருகின்றார்கள். முகாமின் தேவைகளை சென்னையில் இயங்கும் ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தோடும் மற்றும் வேதாரண்யம் தாசில்தார் திரு. கோ. ரங்கராஜன் அவர்களோடும் உடனுக்குடன் தொடர்பு கொண்டு நிறைவேற்றிக் கொள்ளுகின்றார்கள்.

முகாம் நிர்வாகம் பின்வருவோர் உழைப்பால் இயங்கிவருகின்றது.

தலைவர் திரு. வி. தர்மபாலன் உபதலைவர் திரு. எஸ் மோகனதாஸ் செயலாளர் திரு. ஏ. ரவீந்திரநாதன் நிதியாளர் திரு. எம். முருகேந்திரராசா.

இவர்களைத் தவிர ஏழு பேர் கொண்ட ஒரு நிர்வாக சபையும் உண்டு.

மருத்துவத்துறைக்கு டாக்டர் எம். பரமாநந்தம் பொறுப்பாக இருக்கின்றார். அவருக்கு உதவியாக இருவாளர்கள் சே. காளிராசா, எல். பாலமுரளி பணிபுரிகின்றனர்.

விழா தொடங்குவதற்கிடையில், முகாம் நிர்வாகிகள் தங்கள் 'ஊரை' ச் சுற்றிக் காட்டினார்கள்.

கொட்டகைகளைப் பார்வையிட்டோம். ஒரு கொட்டகையில் சராசரியாக ஐந்துபேர்வரை குடியிருக்கின்றார்கள். வீட்டின் தளம் மணலாக இருப்பது மிகவும் வசதிக் குறைவாக இருக்கின்றது. ஒரு சிலர் தங்கள் சுயமுயற்சியின் பேரில், தூர இடங்கள் சென்று களி சேகரித்து வந்து தரைக்குப் போட்டிருக்கின்றார்கள். 'மற்றவர்களும் இப்படிச் செய்யலாமே!' என்றதும், களி எடுப்பதிலுள்ள பிரமப்பிரயத்தனம் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே தங்கள் ஒரு சில குடிசைகளுக்கு களி போட்டவர்களும் கூட இதை ஆமோதித்தார்கள். மருத்துவமனையாக ஒரு கொட்டகை இயங்கிவருகின்றது. நாங்கள் சென்ற சமயம் பலர் தம் குழந்தைகளுடன் வந்து, காய்ச்சல், வயிற்றுப்போக்கு, சளித் தொல்லைகளுக்கு மருந்தெடுத்துச் செல்வதைக் காணக்கூடியதமாக இருந்தது. சில கர்ப்பிணித் தாய்மார்களும் வைத்திய சிகிச்சைக்காகஅப்போது வந்திருந்தார்கள். இங்கு 15 பிரசவங்கள் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது! டாக்டர் திரு. பரமாநந்தமும், அவரது உதவியாளர்களும், தாங்களும் 'அகதி' களாக இருந்து கொண்டு நோய்வாய்ப்பட்ட அகதிகளுக்கு முடிந்த உதவிகளைச் செய்து வருகின்றார்கள். வாரத்தில் இரண்டு நாள் இந்த முகாமிலும் மற்ற நாட்களில் அயலிலுள்ள ஏனைய முகாம்களுக்கும் சென்று வைத்திய சேவை செய்து வருகின்றார்கள்.

சென்னையிலுள்ள 'ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் இதற்கான எல்லா உதவிகளையும் திருப்தியாகச் செய்து வருவதாகக் கூறினார்கள். தமிழக டாக்டர்களும் இடையிடையே வந்து பணியாற்றுவார்களென்றும், ஆனால், சமீப காலமாக அவர்களது வருகை குறைந்து விட்டதென்றும் கூறினார்கள்.

நுளம்புத் தொல்லை, (கொசு) எறும்புத் தொல்லைகளாலும், அகதிகள் மிகவும் கஷ்டப்படுவதாகவும், அதற்கான 'சொல்லி' மருந்துகள் தரப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

குடிநீர் வசதியை 4 குழாய் கிணறுகள், மிகுந்த பற்றாக்குறையோடு செய்து வருவதாகவும், குளிப்பதற்கு 3 கிணறுகளும், ஒரு 'திருக்குளமும்' உண்டு என்று தெரிவித்தார்கள். '290 குடும்பங்களுக்கு இந்த நீர் வசதி எந்த மூலைக்கு?' என்று நியாயமான ஆதங்கத்தை வெளியிட்டார்கள்.

கழிப்பிட வசதி பற்றிக் கூறிய பொழுது அவர்கள் சொன்ன கதை மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

கிட்டத்தட்ட 900பேருள்ள இந்த முகாமில், ஆண்களுக்கு 10ம், பெண்களுக்கு 10ம் ஆக 20 கழிப்பிட வசதியே உள்ளதென்றும், குழிகள் ஆழமில்லாததால் விரைவில் அவை நிரம்பி விடுவதாகவும், சொல்லி வேதனைப்பட்டார்கள்.

கொட்டில்களுக்கு மின்சார வசதி இன்னும் கிடைக்கவில்லை என்றும், தெருவிளக்கு மட்டுமே உண்டு என்றும் தங்கள் 'இருண்ட' வாழ்வு பற்றி எடுத்துரைத்தார்கள்.

கல்வி வசதி பற்றி விசாரித்தோம்.

முகாமிலுள்ள மாணவர்களுக்கு பாடசாலைவசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும் 2 கி. மீ. தொலைவிலுள்ள மாவடி வாய்க்காலுக்கும், 1 கி. மீட்டர் தொலைவிலுள்ள செம்போடைக்கும் சென்று மாணவர்கள் படிப்பதாகவும், தமிழ் நாட்டு ஆசிரியர்களே இவர்களுக்கு கற்பிப்பதாகவும் கூறினார்கள். பாடசாலைக்கு வெய்யிலில் நடந்து செல்வதால், காலணி, தொப்பி வழங்கினால் உதவியாக இருக்குமென்பது இவர்களது எதிர்பார்ப்பு. அத்தனை வெய்யில்!

தமிழ் நாடு அரசு, ஒரு மாணவனுக்கு இரண்டு சீருடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் விதம் வழங்குவதாகவும், ஆனால், இந்தச் சீருடைகள் தரமற்றவையாக இருப்பதால் விரைவில் கிழிந்து விடுவதாகவும் கூறினார்கள். தற்போது பாடசாலை செல்வோர் தொகை 201. இவர்களைவிட, **சுமார் 15 பேரளவில் உயர் கல்வியைத் தொடர வேண்டியிருப்பதால், அவர்களுக்குரிய 'அட்மிஷன்' போக்குவரத்து, சீருடை, புத்தக வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.**

தமிழ்நாடு அரசு செய்யும் உதவிகள் பற்றிக் குறிப்பிட்ட போது பின்வரும் தகவல்கள் அவர்களிடமிருந்து கிடைத்தன.

பெரியவர்களுக்கு இருவாரத்துக் கொரு முறை 75 ரூபாவும் சிறியவர்களுக்கு 60 ரூபாவும் வழங்கப் படுகின்றன.

அரிசி 1 கிலோ 57 காசு விலையில், பெரியவர்கள் 400 கிராம். 12 வயதுக்குட்பட்டோருக்கு 200 கிராம்.

மண்ணெண்ணெய் 1 லிட்டர் 3 ரூபா 5 காசு பெறுமானத்தில் ஒரு கார்டுக்கு 10 லிட்டர்.

சீனி, 1 கிலோ 5 ரூபா 25 காசுக்கு அரை கிலோ. 4, பேருக்கு மேலுள்ள குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்கு 2 கிலோ.

இவை தவிர, சமையலுக்கு வேண்டிய சாமான்களின் பட்டியலும் கிடைத்தது.

ஒரு குடும்பத்துக்கு பானை 1, சட்டி 1, கோப்பை 1 கரண்டி 2 தம்ப்ளர் 2.

மற்றும் பாய், விரிப்பு என்பனவும், பொழுது போக்குவதற்கு கருப்பு வெள்ளை டி. வி. ஒன்றும் தமிழ் நாடு அரசு வழங்கியுள்ளதாகவும் தகவல் தெரிவித்தார்கள். வானொலி இல்லாக் குறையையும் சுட்டிக் காட்டினார்கள். இத்தனை குடும்பத்துக்குமாக இரண்டு அம்மிகளும், இரண்டு ஆட்டுக்கற்களும் தரப்பட்டுள்ளதாகவும். இவைபோதாமல் இருப்பதால் பல சிரமங்கள் ஏற்படுவதாகவும் ஆதங்கம் தெரிவித்தார்கள்.

OFERR மூலம் விளையாட்டு உபகரணங்களாக ஒரு கால்ப் பந்தும். 'கரம்போர்ட்' ஒன்றும் வழங்கப்பட்டுள்ளதாகவும் படிப்பதற்கு 'தினத்தந்தி', 'தினமலர்', 'தினகரன்' நாளேடுகளும், 'கல்கி', 'விகடன்' சஞ்சிகைகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் சில சஞ்சிகைகள் வழங்கினால், படிப்பகத்தை சிறப்பாக பயன்படுத்த முடியும் என்றும் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

ஏது எப்படி இருப்பினும் தமிழ்நாடு அரசும், ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகமும் தாசில்தார் திரு. கோ. ரங்கராஜன் அவர்களும் வழங்கும் உதவிகளை என்றும் மறக்க முடியாது, என்று நன்றி தெரிவித்தார்கள்.

இந்த முகாமைச் சுற்றி 3 கி. மீட்டர் தொலைவில் **புஷ்பவனம்** முகாமும், 6 கி. மீட்டர் தொலைவில் **ஆந்காட்டுத்துறை** முகாமும், 9 கி. மீட்டர் தொலைவில் **நாலு வேதப் பதி** முகாமும் இருக்கும் தகவலும் தெரிவிக்கப்பட்டது. பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கவிருந்த படிப்பகத் திறப்பு விழா, ஒரு படியாக மாலை 6 மணிக்கு நாதஸ்வர இசையுடன் ஆரம்பமானது! மேளம், நாதஸ்வரம் வாசித்தவர்களும் அகதிகள்தாம்! யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். குத்து விளக்கேற்றி படிப்பகத்தைத் திறந்து வைத்து அற்புதமான ஓர் உரையை நிகழ்த்தினார். திரு. அரு. கோபாலன் அவர்கள். தாயகம் பிரிந்து, உற்றார். உறவினர், உடைமைகள், வீடு வாசல் துறந்து வந்துள்ள அகதிகளுக்கு அவரதுபேச்சு ஆறுதலையும் தேறுதலையும் தந்தது. புறப்படும் போது, முகாமில் எழுந்தருளியிருந்த அந்தக் 'கடுகுப்' பிள்ளையாரையும், (ஆமாம்; அந்தப் பிள்ளையார் கோயிலை அப்படியே தூக்கி உள்ளங்கையில் வைத்துவிடலாம்! கோயிலும் பிள்ளையாரும் அத்தனை 'கடுகு' சைஸ்! கடுகானால் என்ன; அண்ட சராசரம் முழுவதையுமே தமக்குள் அடக்கியவராயிற்றே அவர்!) இடும்பன் சாமியையும் கையேற்றித் தொழுது, 'சாந்தியையும், அமைதியையும் இவர்களுக்கு விரைவில் கொடு இறைவா!' என்று வேண்டிக் கொண்டு திருச்சி நோக்கி பயணமானோம். □

இங்குள்ள, அகதிகள் பெரும்பாலும் திருகோணமலையைச் சேர்ந்தவர்களாகையால், முன்பு தாம் திருகோணமலை சென்ற விபரத்தையும், அங்கு கன்னியாவில் நடந்த பாரதி விழா பற்றியும் நினைவு கூர்ந்தார். பாரதி விழாவில் தான் பேசிக்கொண்டிருந்த போது ஓர் இளம் மாணவி எழுந்து, "எங்கள் ஈழ மணித்திருநாட்டை, உங்கள் பாரதியார் 'சிங்களத்தீவு' என்று பாடியுள்ளாரே! இது தகுமா?" என்று நியாயமானஒரு கேள்வியை எழுப்பினார்.

அந்த மாணவியைப் பாராட்டிவிட்டு நான் சொன்னேன், "சிங்களத் தீவு" என்றால், அது சிங்களவர்கள் வாழும் நாடு என்ற அர்த்தத்தில் பாரதியார் பாடவில்லை. 'சிங்களம்' என்பதற்கு 'தங்கம்' என்றும் ஒரு பொருள் உண்டு! 'தங்கம்' என்ற அர்த்தத்திலேயே அவர் அப்படிக் குறிப்பிட்டார்!" என்று ஒரு போடு போட்டார்! சபை பெரிதாக அதை வரவேற்று கரகோஷம் செய்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத் தமிழரின் அரசியல்: ஒரு சாட்சியம் - அபிமன்யு

இந்த ஆரம்ப சலுகைகளை முதலாகப் பற்றி, சமுதாயத்தின் ஏனைய துறைகளிலும் அவர்கள் ஆதிக்கஞ் செலுத்தவல்ல கெட்டிக்காரர்கள். ஈழத்தமிழர் சம்பாதித்துக் கொண்ட இந்த முந்து தன்மையை எதிர்காலத்திலும் தக்க வைத்துக் கொள்வதற்கு மேல்மாகாணத்தமிழ் பிரதிநிதித்துவத்துடன் இணைந்த அரசியல் முதன்மையும் அவசியம் என அவர் மட்டிட்டமையில் தவறில்லை. அவருக்கு மூத்தவர் இராமநாதன். பேய்ரா ஏரியின் கரையிலே மேயும் காகங்கள் இளைப்பாறி எச்சமிடுவதற்கு ஏற்ற தங்குமிடங்களாக, பழைய பாராளுமன்ற முன்றலில் பொன்னம்பலம் சகோதரர்களுக்குச் சிலைகள் நாட்டி, அவர்களுடைய முன்னோடிச் சேவைகளினால் பயனடைந்த பெருங்குடி மக்களின் சந்ததியார், அவர்களுடைய சேவையைப் பாராட்டுதல் பற்றாது; நிச்சயம் பற்றாது.

மனிதருடைய திட்டங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்ட, புற ஏதுக்களும் இலங்கையின் அரசியல் போக்குகளைப் பாதிக்க வல்லன என்பதை டொனமூர் யாப்புநடை முறைப்படுத்தப்பட்ட காலத்தில் ஈழ மக்களின் சகல மட்டத்தினரும் அவதானித்தார்கள். இந்த அவதானித்தலின் பிரதிபலிப்புகளும் ஈழத் தமிழரின் எதிர்கால அரசியல் போக்குகளைப் பாதித்தன. இவை நம்மை இன்னொரு கட்டத்திற்கு அழைத்துச் செல்லும் பெற்றியன.

டொனமூர் விசாரணைக் குழு இலங்கைக்கு வருகை தரவு தந்த அதே காலப் பகுதியிலே தான், மகாத்மாகாந்தி, சத்தியமூர்த்தி, ராஜாஜி போன்ற இந்திய விடுதலை இயக்கத் தலைவர்களும் இலங்கை விஜயத்தைமேற்கொண்டனர். இவர்கள் யாழ்ப்பாண மண்ணிலும் நடந்தார்கள். இவர்களுக்குச் சங்கையான வரவேற்பு அளிப்பதிலும் மாணவர் காங்கிரஸ் என்றும், பின்னர் வாலிபர் காங்கிரஸ் என்றும் அழைக்கப்பட்ட அமைப்புப் பெரும் பங்கினைக் கொண்டது. இந்தக் காங்கிரஸ் ஈழத் தமிழர் அரசியலுக்கு உபயோகமான வழிகாட்டுதலை அளித்தல் கூடும் என்கிற எதிர்பார்ப்பு, குழந்தையாகப் பிறக்கும் பேறு பெறாமலே, கருச்சிதைவாயிற்று. வாலிபர் காங்கிரஸின் ஆரம்ப கால உறுப்பினர் பலர், பிற்காலத்திலே அரசியல் சார்ந்தும், அரசியலுக்கு அப்பாலும் உபயோகமான சமுதாயப் பணிகள் இயற்றினார்கள் என்பது வேறு சங்கதி. ஆனால், வாலிபர் காங்கிரஸ் ஈழத் தமிழருடைய அரசியல் தலைமைத்துவத்தைப் பெறுவதிலே பரிதாபகரமாகத் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. இந்தத் தோல்வியினாலும், யாழ்ப்பாணத்து நிலப்பிரபுக்களின் தலைமைத்துவம் அவர்களுடைய வாரிசுகளின் மூலம் நீடிக்கும் அவலம் தொடர்ந்தது. இதனைச் சாதனையாக்கிய பெருமை, 'மூத்த தலைவர் மூவ'ருக்கும் மட்டுமல்லாமல், பின்னர் வந்த பலருக்கும் (அவர்கள் அரசியல் வாதிகளானாலென்ன இலக்கிய வாதிகளானாலென்ன) 'ஜாதிமான்கள்' சார்ந்தே தலைமைத்துவத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் உரிமைக்கு 'அடியெடுத்து'க் கொடுத்த பெருமை, சமய குரவராகவும் போற்றப்படும் நாவலரைச் சாரும். உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

இந்த ஆறுமுக நாவலரின் வரலாற்றுடன் தான் ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றினை மட்டுமல்லாமல், ஈழத்தமிழர் இலக்கிய வரலாற்றினையும் எழுதத் துவங்குதல் பொருந்தும் என நினைக்கும் 'புத்திஜீவி'கள் இன்றும் நம் மத்தியில் இருக்கிறார்கள். அத்தகைய பாரிய தாக்கத்தினை ஈழத் தமிழர் வரலாற்றில் ஏற்படுத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பணிகளை ஈண்டு பிரஸ்தாபித்தல் வரலாற்று நேர்மையை நாட்டும் முயற்சியுமாம்.

பிரித்தானியர் காலத்து ஈழத் தமிழர்தம் தமிழெழுச்சியைப் பற்றி எழுதும்பொழுது ஆறுமுக நாவலரை முழு முதல் நாயகனாக ஏற்றுப் போற்றுதல் நியாய வரன்முறைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு சம்பிரதாயமாகவும் நிலைத்துவிட்டது. யாழ்ப்பாணத் தமிழர்கள் இந்தச் சம்பிரதாயத்தின் தாஸானுதாஸர்களாகவும் நிகழ்கின்றார்கள். யாழ்ப்பாணத்துக் காவியப் பாடசாலையின் முயற்சிகளினாலும், பின்னர் காவியப் பாடசாலையின் செயற்பாட்டினை, இலங்கையின் கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் இயற்ற முனைந்த ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் பணிகளினாலும் உருவாக்கப்பட்ட பண்டிதர் வர்க்கத்தினர் செய்த கடிய பிரசாரங்களினாலும், சாதாரண மனிதப் பலவீனங்களுடன் வாழ்ந்த ஆறுமுக நாவலர் என்னும் மனிதன், ஐந்தாவது சமயக் குரவர் என்கிற நிலைக்கு உயர்த்தப்பட்டார். அவருக்குக் 'குரு பூஜைகள்' நிகழ்த்துவதற்கு ஓர் உருவந் தேவைப்பட்டது. அவருடைய 'தொண்டர்கள்' இந்தப் பிரச்சினையினால் துவண்டு விட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில்லை. பண்ணாகப் பகுதியிலிருந்து, மனதிலே நின்ற நாவலர் உருவச் சாயலிலே நடமாடித் திரிந்த ஒரு பண்டாரத்தினை அழைத்து வந்தார்கள். அந்தப் பண்டாரத்தை மாதிரியாக வைத்து வரையப்பட்ட படத்திற்கு 'மூர்த்தி' பாலிக்கப்பட்டது. (அந்தப் படந்தான் இன்றளவும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் திருவுருவப் படமாகச் செலாவணி ஆகின்றது. இதில் எவ்வித தோஷமும் இல்லை. திருவள்ளுவரை சிவாஜி கணேசனின் ஸ்டைலிலே தரிசிக்கின்றோம். ஔவையாரை கே. பி. சுந்தராம்பாளின் சாயலிலே போற்றுகின்றோம். இலட்சிய நடிகர் ராஜேந்திரனின் மண ஒப்பந்தத்துக்கே 'டிமிக்கி' கொடுத்த விஜயகுமாரியை 'மொடல்'லாகக் கொண்டு உருவாகிய கண்ணகி சிலையை வணங்குகின்றோம். இவையெல்லாம் ஆகுமென்றால், அதுவும் ஆகும் என்று சமாதானம் அடைதல் சாலுமா?)

பண்ணாகத்துப் பண்டாரம் 'ஆறுமுக நாவல'ராக 'அவதரித்த' இந்த வர்த்தமானத்தினை அவனுக்குப் பிற்காலத்திலே கூறியவர் சாமானியரல்லர். தமிழ் வசன உயிர்ப்பின் அத்தனை நாடிகளையும் அறிந்த தக்கார். வல்லாளர். பண்டிதர்களுக்கு எல்லாம் பண்டிதராய் விளங்கிய பண்டிதர் மணி. இதனைக் கூறிய பின், சற்றே மோனத்தில் ஆழ்ந்து, தமக்கே உரித்தான குறும்புச் சிரிப்புடன், 'இந்த உருவமாற்றுத் திருவிளையாடற் புராணத்தை நாவலரின் ஆன்மா ஆசீர்வதிக்குமோ யான் அறியேன்' என்று முடித்தார். இதன் உள்ளர்த்தம் அப்பொழுது அவனுடைய பிடிமானத்திற்குள் சிக்குப் படவில்லை. சிக்கினை அவிழ்க்கும் முயற்சியாகவும் அவன் ஆறுமுக நாவலரைக் கற்றான்.

ஆறுமுகம் இருமரபு துய்ய வந்த கார்காத்த வேளாளர் மரபிலே 'திரு அவதாரம்' செய்தார். உரிய முறையிலே வித்தியாரம்பஞ் செய்யப்பட்டு, அக்கால யாழ்ப்பாணம் போற்றிய மரபு தழிழ்ச்சியை தமிழை ஐயந்திரிபறக் கற்றார். கல்வியின்பால் அவர் கொண்ட காமம் அகண்டது. யாழ்ப்பாண மண்ணிலே பரம்பத் தலைப்பட்ட ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற அவாவினார். இதனால், அவருக்கு அக்காலத்தில் 'யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராகத் திகழ்ந்த பேர்சுவல் பாதிரியாரின் தொடர்பு கிட்டிற்று. நண்பராயினர். ஆறுமுகம் பேர்சுவலுக்குத் தமிழ் கற்பித்துத் தரல் வேண்டும் என்றும், அவர் இவருக்கு ஆங்கிலம் கற்பித்தல் வேண்டும் என்றும் ஏற்பாடாயிற்று. இஃது இருவருக்குமே வசதியாக அமைந்தது. அவரிடம் பயின்ற தமிழை முதலாகப் பற்றி, பேர்சுவல் பாதிரியார் பாதிரிவேதம் ஏற்றுக்கொண்ட பைபிள் பதிப்பின் தமிழாக்கம் ஒன்றினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். தமிழ்ச் சீடனின் இந்தப் பணியிலே ஆசான் ஆறுமுகம் துணை நின்றார். இதே காலத்தில் சென்னையிலும் அத்தகைய ஒரு மொழிபெயர்ப்புப் பணி நடந்தது. இந்த இரண்டு மொழிபெ


நேர்த்தியாகவும்
கலையழகு மிளிரும்
வண்ணக் கலவையாகவும்
அச்சு வேலைகள்
செய்திட
தமிழ் நூல்கள்
பதிப்பிட
அணுகுங்கள்
AR prints
375-8, Arcot Road
Kodambakkam
MADRAS 600 024 INDIA
Call : PP 420011




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யர்ப்புகளிலும் எது சிறந்தது என்பது பற்றிய ஒரு வித்துவப் பனிப்போர் நடந்ததாகவும் வரலாறு உண்டு. தன் சரக்கின் தரத்திற்கு வாதுரைக்க பேர்சுவல் பாதிரியார் சென்னை செல்ல நேர்ந்தது. தனது தமிழ் வித்துவத்தை நிலை நாட்டுவதற்காகப் பாதிரியார், தமது தமிழ் ஆசானையும் உடனழைத்துச் சென்றார். ஈற்றிலே, சென்னையில் யாழ்ப்பாணத்து விவிலிய மொழிபெயர்ப்பு சங்கை செய்யப்பட்டது என்பர். பேர்சுவல் பாதிரியாரின் முயற்சிகளினாலே தான் நாவலருக்கு முதன் முதலாகத் தமிழ் நாட்டின் வாசம் பொசிந்தது. இயற்கையிலேயே கெட்டிக்காரரான அவர், இந்த வாசத்தினைப் பெரிதும் பயன்படுத்திக்கொண்டார். அச்சுக்கூடம் அமைத்து நடத்துதல், மதப் பிரசாரத்திற்கு ஏற்றதுண்டுப் பிரசுரங்களை அடிமட்ட வாசகர்களும் சுவைக்கும் வண்ணம் எழுதுதல், மதத்தின் அடிப்படை ஆசாரங்களை எவ்வாறு வினா-விடை அமைப்பிலே போதிப்பது, மத பிரசாரத்திற்கு எவ்வாறு உபதேசிமார்கள் பயன்படுகின்றார்கள், அவர்களை உருவாக்கக்கூடிய பாட விதானத்தினை எவ்வாறு அமைத்தல் வேண்டும், அவர்களைப் பயிற்றுவிக்கும் வித்தியாசாலைகளை எவ்வாறு நிறுவி நிருவகித்தல் வேண்டும் என்கிற சூக்குமங்களை எல்லாம் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செயற்பாடுகளை முன்மாதிரியாக வைத்துத் தேறினார். கிறிஸ்தவப் பரம்பலுக்கு எதிராகச் செயற்படுவதற்கு வைதிகர்களிடமிருந்து நிதி உதவி பெறத்தக்க நிதர்சனத்தினை உணர்ந்தார். இந்து மதத்தின் தூய்மையை நிலைநாட்டுதல் பற்றிப் பிரசங்கங்கள் மூலம் பிரசாரஞ் செய்தார். அவர் நாவன்மை மிக்கவர். அவருடைய பிரசங்கத்திலே மயங்கிய ஆதினம் ஒன்று அவரை நாவலர் என்று சிறப்பித்தது. தான் மேற்பார்வை செய்த பைபிளின் மொழிபெயர்ப்பு ஏற்புடையது என வாதுரைக்கச் சென்னை ராஜதானிக்குச் சென்ற ஆறுமுகம், வண்ணார் பண்ணையில் அச்சுக்கூடம் ஒன்று நிறுவும் வசதியுடன், இந்து மத பிரசாரஞ் செய்ய வல்ல உபதேசிமார்களை உருவாக்கும் ஒரு வகை வெறியுடன் ஆறுமுக நாவலராய் யாழ்ப்பாணம் மீண்டார். அவர் வண்ணார்பண்ணையிலே சைவ உபதேசிமார்களை உருவாக்க வல்ல சைவப் பிரகாச வித்தியாசாலையும் ஸ்தாபகம் செய்தார்.

ஆறுமுக நாவலர் வசன நடை கைவந்த வல்லாளர் என்பது முற்றிலும் உண்மை. ஏட்டுத்தமிழுக்குப் பழகு தமிழ்ச் சொற்களைத் 'தாழிதம்' செய்து புதிய வீறினைப் பாய்ச்சினார். தமது இலக்கணப் புலமையைத் துணை பற்றி, தமிழ் வசன நடைக்கு ஓர் எளிமையையும், அதே சமயம் வீறினையும் ஏற்றிய மாயாவி அவர். சொற்கள் அவருக்குச் கைகட்டிச் சேவகஞ் செய்தன. திருவிளையாடற் புராணம் போன்றனவற்றை அழகிய வசனத் தமிழிலே தந்தார். பாடசாலைகளின் உபயோகங் கருதி அவர் எழுதிய நூல்களுக்கும் அவர் வகுத்த வசன நடை பெரிதும் துணை நின்றது. தம்மை மறந்துங் கூட நாவலர் தம்மை இலக்கியவாதி எனக் கற்பித்துக் கொண்டதில்லை. அவருடைய சுயம்புவான இலக்கிய ஆக்கங்களாக நமக்குக் கிடைத்தவை 'நாவலர் பிரபந்தத் திரட்டு' என்ற நூலிலே திரட்டப்பட்டுள்ள எழுத்துக்கள் மட்டுமே. இதிற் பல இடங்களிலும் 'தூஷணம்' மருவிய கண்டனத் தமிழை அவர் லாவகமாகக் கையாண்டார். கிறிஸ்தவ பிரசாரத்திற்கு எதிராக மல்லுக்கு நின்றார். 'கரையார் உயர் ஜாதி இந்துக்கள் அல்ல' என்று அச்சாதியைச் சேர்ந்த 'வித்துவதேசரி'யுடன் சண்டை போட்டார். 'கீழ்சாதி'யாருக்கு பாடசாலைகளில் அனுமதி வழங்கப்படும் 'அக்கிரம'த்திற்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பினார். கோயில் தர்மகர்த்தா ஒருவர் நடத்திய இரகசிய காதல் நாடகத்தை அம்பலப் படுத்தி சாடினார். கண்ணகி செட்டியார் சாதியிலே பிறந்த சமண சமயத்தவள் என்பதினால் அவள் போற்றுதலுக்கும் வந்தனைக்கும் உரியவளல்லள் என்று உபதேசித்தார். அவருடைய எழுத்து ஊழியம் இத்தகைய சில்லறை விவகாரங்களிலே ஈடுபடக் கரைந்தது. அவருடைய எழுத்து ஆண்மை, யாழ்ப்பாண மண்ணின் 'அதி சின்னப் புத்தி'களுடன் இரண்டறக் கலந்தமை ஈழத் தமிழின் வளத்திற்கு ஏற்பட்ட இழப்பு என்று அவன் மனசார வியாகூலம் அடைந்தது உண்டு.

யாழ்ப்பாண கலாசாரத்தின் பெருமைகளை மட்டுமல்லாமல்,சிறுமைகளையும் அவர் பிரதிநிதித்துவப் படுத்தினார். சாமானிய மனிதராக, இன்னொரு வகையிலே சொல்வதானால், அன்றைய யாழ்ப்பாணத்து ஜாதி வேளாளர்களின் அச்சாவான பிரதிநிதியாக, வாழ்ந்தார். வள்ளலாரின் சமய பிரசாரத்திலே பொறாமை கொண்டார். 'அருட்பா மருட்பா' வழக்கிலே, கோட்டடியிலே தவம் கிடக்கும் சராசரி யாழ்ப்பாணவாசியாக நடந்து கொண்டார். நாவலர் உருவ அமைப்பிலே ஆதிதிராவிடனாய், கறுப்பு மேனியராய் விளங்கினார். அவருடைய சகோதரி ஒருத்தி, அக்காலத்திலே மிகவும் புரட்சி பண்ணி, செட்டியார் ஒருவர் மீது காதல் வசப்பட்டதாகவும் பிரஸ்தாபம் உண்டு எங்கேயோ தேள் கொட்டினால்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈழத்துக் கல்வி வளர்ச்சி – 1

ஐரோப்பியருடன் ஏற்பட்ட வியாபாரத் தொடர்பும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அவர்களுடைய இறைமாட்சிஆதிக்கமும் நமது கல்விப் போக்கினைப் பெரிதும் மாற்றின. 1505-இல் புயல் விதியால் போர்த்துக்கீசர் இங்கு வந்தனர். இக்காலத்தில் ஐரோப்பாவில் கல்வியில் மறு மலர்ச்சி இயக்கந் தோன்றிவிட்டது. புதிய போக்கும், புதியனவற்றைக் கண்டறிய வேண்டுமென்ற எழுச்சியும் மேலோங்கி நின்றன. இருப்பினும், போர்த்துக்கீசர் கத்தோலிக்க மதத்துடன் இங்கு வந்தனர். எனவே, கத்தோலிக்க மத பிரசாரகர்கள் கல்வியிலே அக்கறை காட்டுதல் இயல்பாயிற்று. இச் சந்தர்ப்பத்திலே பிறிதொன்றினையும் இங்கு ஞாபகப்படுத்துதல் நன்று. மத நிறுவனங்கள் கல்வி-வைத்திய வசதிகளைக் கவனித்தல் என்பது மேற்கு நாட்டினராலும், கிறித்துவ மிஷனரியினராலும் அறிமுகப் படுத்தப்பட்டது என்னுந் தவறான அபிப்பிராயமொன்று நிலவுகின்றது. கிறித்து சகாப்தத்துக்கு முன்னரே, பௌத்த-சமண மதங்கள் இத்தகைய சேவைகளை முன்னின்று இயற்றின என்கிற வரலாற்று உண்மையை நாம் மறந்துவிடலாகாது. தமிழ் வளர்ப்பதற்குச் சங்கங்கள் இருந்தன என்கிற ஐதீகம் பௌத்த மதச் செல்வாக்கினாலேற்பட்டது என்று கொள்ள இடமுண்டு.

-கல்விமான்

எங்கேயோ நெறி சுட்டியது போலப் பாவலாச் செய்து கூத்தாடுவதும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஒரு பாங்கமே. இதனாலும், யாழ்ப்பாணத்தின் நிலப்பிரப்புத்துவ சமூகமும், அதன் தலைமைத்துவத்தைப் பெற்றிருந்த 'கார்காத்த' வேளாளச் சாதியாரும் சிதிலப்படக்கூடாது என்பதிலே நாவலர் கட்டித்த அக்கறை காட்டினார். ஏனைய கீழ் சாதியினர் கல்விச்செல்வம் பெற்றால், அவர்கள் மத்தியிலேயும் 'வித்துவகேசரி'கள் தோன்றுதல் சாத்தியம் என்று நாவலர் நிச்சயமாகவே அஞ்சினார். இந்த 'அவலம்' நிகழாது பார்த்துக் கொள்வதும் ஆறுமுக நாவலரின் கல்விப் பணியின் பிறிதோர் அம்சமாக முகங் காட்டலாயிற்று. இவை அனைத்தும் சமய குரவர்களுக்கான மேலான பணிகள் தாமோ என்பதை இன்றைய தலைமுறையின் சைவ மதப் பெரியார்கள் பொருள் அறிந்து கூறக்கடவர். வேளாளச் சாதியார் தவிர்ந்த ஏனைய நாற்பத்தேழு சாதியாரையும் கொச்சையாகச்சாடியமை மட்டுமே ஆறுமுக நாவலரின் அளப்பரிய சமுதாய சீர்திருத்தப் பணியா என்பதைத் தற்காலச் சமூகவியலாளர் ஆராய்ந்து அறிக்கையிடக் கடவர். நாவலர் பிரபந்தத திரட்டின் உள்ளீடு எத்தகைய தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது என்பதைத் தற்கால இலக்கிய விமர்சகர்கள் **சத்தியத் தள**த்திலே நின்று விண்டு காட்டக் கடவர்.

**சத்தியத் தள**த்திலே என்று அவன் தடித்த எழுத்திலே சுட்டுவதற்கு காரணம் உண்டு. 'மணியோசை கேட்காத வெளியிலே, மூக்கு நுனி பார்த்து' ஆசாரம் பேணி மலங்கழிக்கவும், பின்னர் குளத்தங்கரை சென்று கையிலே மணல் அப்பி அடிக் கழுவவும் (இவை அனைத்தும் நாவலர் கற்பித்த ஆசார விதிகள்) இன்றும் ஆயத்தமாக இருக்கும் சைவ சமயப் பெரியார்களும், பண்டிதர் வர்க்கத்தின் எச்ச சொச்சங்களும் ஆறுமுக நாவலரை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் மூத்த முதல்வராய் ஏத்திப் போற்றுவதிலே தப்பில்லை. ஆனால், முற்போக்கு இலக்கியத்தின் 'தத்துவக் கொடுமுடி' என்று இன்றும் எழுத்தாளர் சிலராலே ஏற்றுக் கொண்டாடப்படும் பேராசிரியர் கைலாசபதி **சத்தியத் தள**த்திலே நின்று ஆறுமுக நாவலரின் தமிழ்த் தொண்டினை விண்டு காட்டிட ஒரு காலத்தில் முனைந்தாரா?

கைலாசபதி, தற்கால இலக்கியப் போக்கிலே, தமது விமர்சனக் கட்டுரைகளால் ஏற்படுத்திய தாக்கம் கணிசமானது. பாக்கு நீரிணையின் இரண்டு பக்கத்திலும் அவருக்கு இன்றளவும் 'பக்தர்கள்' உளர். இலக்கியத்திலே மார்க்ஸ் காட்டிய கம்யூனிஸ சித்தாந்தங்களை எவ்வாறு பயிலலாம் என்று விளக்குவதிலே நிறைய 'மினை'க்கெட்டவர். யதார்த்தசோஷலிஸ இலக்கியம் பற்றியும், மண்வாசனை இலக்கியம் பற்றியும் உரத்த சிந்தனையில் ஈடுபட்டவர். டொமினிக் ஜீவா போன்ற ஒரு சாமானியன் புனை கதைக்கான சாகித்திய மண்டலப் பரிசு பெறுவதற்குக் கரிசனையுடன் உதவியவர். 'தற்கால எழுத்துச் சித்தர்களுக்கு ஏற்றவொரு "தத்துவக் கோட்பாட்"டினைத் தமிழிலே முன்வைத்த சிந்தனையாளர்' என்று அங்கலாய்ப்புடன் அவரைப் புகழ்பவர்களுக்கும் பஞ்சம் இல்லை. இந்தக் கைலாசபதி அறுபதுகளின் ஆரம்பத்திலே, 'தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தின் பிதாமகர்' என்று நாவலருக்கு முடிசூட்டுவதில் முந்தி நின்றார். முற்போக்கு எழுத்தாளர் அணியிலே குளிர்காய்ந்து கொண்டிருந்த 'பஞ்சம'ச் சாதியைச் சேர்ந்த எழுத்தாளர்களும் கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாசபதியின் வழி காட்டுதலி னால், நாவலருக்கு விழா எடுத்த கூத்துகளும் யாழ்ப்பாண மண் ணிலே அரங்கேறி உள்ளன.

ஆறுமுக நாவலருக்கும், ஈழத் தமிழர் அரசியலிலே மூத்த தலை வராக விளங்கிய மூவருக்கும், யாழ்ப்பாணத்துப் பண்டித வர்க் கத்திற்கும், மார்க்ஸிஸ்டாகப் பெயர் எடுத்த கைலாசபதிக்கும் பொதுவான சதுர்த்த சங்க மத்தை உருவாக்க யாழ்ப்பாணக் கலாசாரத்தினால் மட்டுமே சாத்தியமாக அமைந்ததற்குக் காரணம் என்ன?

இதன் சூட்சுமத்தை விளங் கிக் கொள்வதற்கான ஒரு நிகழ்ச் சிக்கு அவன் சாட்சியாய் அமர் கின்றான். 'சரஸ்வதி' என்ற பத் திரிகை தமிழ்முற்போக்கு இலக் கியத்தின் சங்கப் பலகையாக தமிழ்நாட்டிலிருந்து வெளிவந் தது. காலத்தாலும் சாதனையா லும் இது 'தாமரை'க்கு முந்தி யது. ஜெயகாந்தன் என்ற கதை ஞனை 'சரஸ்வதி'தான் உரிய முறையிலே தமிழ் வாசகனுக்கு அறிமுகப்படுத்தியது. 'தமிழ்நாடு ஈழம்' என்று வட்டார நலன்கள் பாராட்டாது 'சரஸ்வதி' இலக்கி யச் சேவை இயற்றியது. அது ஈழத்தின் 'பஞ்சம' எழுத்தாளர் களின் எழுத்துக்களுக்கு உரிய மதிப்பு அளித்தது. டானியல், டொமினிக் ஜீவா, எச் எம் பி. மொஹிதீன் போன்ற எழுத்தா ளர்களுடையபடங்களைஅட்டை யிலேஉவந்து பிரசுரித்தது. இந்தப் பத்திரிகையை, எத்தனையோ பொருளாதாரக் கஷ்டங்களின் மத்தியிலும், விஜயபாஸ்கரன் ஆசிரியராய் அமர்ந்து வெளிட்டு வந்தார். இவர் 1960 ஆம் ஆண்டில் இலங்கைப் பயணம் ஒன்றினை மேற் கொண்டார். மட்டக் களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய தமிழீழப் பகுதிகளுக்கும் சென் றார், (மட்டக்களப்பிலே இந்த வரலாற்றுக்குச் சாட்சியாய் அம ரும் அவனுடைய வீட்டிலே மூன்று நாள்கள் தங்கி, கிழக்கு மாநிலத்தின் இலக்கிய ஆர்வலர் களை விஜய பாஸ்கரன் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தார்.) யாழ்ப் பாண விஜயத்தின்போது, கைலா சபதி வண்ணார் பண்ணையில் அமைந்த தமது இல்லத்தில், அவருக்கு ஒரு வேளை விருந்த ளித்து மகிழ்ந்தார். இந்த விருந் திலே கலந்து கொள்ள ஈழத்து எழுத்தாளர் சார்பில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம்-தேவன் மட்டுமே அழைக்கப்பட்டிருந் தார். அப்போது இலங்கை முற் போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின்செயலா ளராக இருந்தவர் டொமினிக் ஜீவா. அவர் அழைக்கப்பட வில்லை. தேவன் கம்யூனிஸ்டல்ல அவரை முற்போக்கு இலக்கிய காரர் 'பெரிய எழுத்தாளர்' என்று அங்கீகரித்ததும் இல்லை. அவர் மரபுவாதிகளான எழுத் தாளர்களை அடக்கிய 'யாழ்ப் பாண எழுத்தாளர் சங்க'த்தின் செயலாளராக விளங்கினார். தேவன் உரையாடலில் வல்லவர். தமிழ் - ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் சரளமாகவும், நகைச்சுவையுடனும் பேசுவார். (அவனுக்குத்தேவன் இனிய நண் பன்.) கைலாசபதி விஜயபாஸ்கர னுக்கு அளித்த விருந்து பற்றிப் பின்னர் குறிப்பிடும் பொழுது, 'இந்த யாழ்ப்பாண மண்ணி லேயே விருந்துக்கு உகந்த எழுத் தாளராக கைலாசபதி என்னை மட்டும் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன?... நானும் ஆறுமுக நாவலரைப் போல இருமரபும் துய்ய வந்த வேளா ளர் மரபிலே பிறந்தவன் என் பதைக் கைலாசபதி என்னுடைய Additional Qualification னாக மதித்திருக்கக் கூடும்' என்று தமக்கே உரித்தான குறும்புச் சிரிப்புடன் கூறினார். கைலாச பதிக்கு நாவலர்பால் எழுந்த அக்கறைக்கான உண்மைக் கார ணம் அப்பொழுதுதான் அவ னுக்குப் பிரகாசமாயிற்று! (கை லாசபதியைப் போன்றே, மார்க் ஸிஸம் பேசிய அரசியல் தலை வர்கள் பலரும் எத்தகைய இரட் டை மதிப்பீடுகள் கொண்டு செயற்பட்டார்கள் என்கிற விபரங்கள் பின்னர் வரும்.)

இருப்பினும் ஆறுமுக நாவ லர், யாழ்ப்பாணத்து நிலப்பிர புத்துவ முறையும் அதனுடன் ஒட்டிய ஆசாரங்களும் மாறாது பாதுகாக்கப்பட வேண்டும் என் பதைத்தமது மதமாக விரித்து ஊழியஞ் செய்த வைதீகர் என் பதை யாராலும் மறுக்க முடி யாது. மட்டக்களப்பு மாநிலத் தில் முக்குவ சாதியாரே முதன் மை பெற்று விளங்குகின்றார்கள். இதனாலும் நாவலர் மட்டக் களப்பு மாநிலத்தில் தமிழர்கள் வாழ்ந்ததை அங்கீகரிக்க மறுத் தார் என்பதும் குறிப்பிடத்தக் கது. அவருடைய அரசியல் வாரி சான சேர் இராமநாதன், சர்வ சன வாக்குரிமை வழங்கப்படுவதி னால் சாதி ஆசாரங்கள் நெகிழ்ந்துவிடும் என்று கவலைப் பட்டதுடன், 1928 ஆம் ஆண்டில் 79 கிராம சங்கப் பிரதிநிதிகளு டன் தேசாதிபதியைப் பேட்டி கண்டு, தேச வழமையின்படி தமி ழர்களின் பாரம்பரியங்களை ஆங்கில ஆட்சி காப்பாற்றித் தரல் வேண்டும் என்று வாதாடி னார்.

இவ்வாறு, ஆறுமுக நாவல ரின் ஆசார உழவார ஊழியத்தி னாலும், மூத்த தலைவர் மூவர் இயற்றிய அரசியற் பணிகளா லும், ஈழத் தமிழர் அரசியல் சமன் யாழ்ப்பாணத்து சைவ வேளாள நிலப்பிரபுக்களின் உரி மைகளும், ஆசாரங்களும், முந்து சலுகைகளும் பேணப்படுதல் என் கிற வாய்பாட்டில் அமையலா யிற்று. அதனை அழுத்தமாகச் சொல்லும் நேர்மை இப்பொழுது பலருக்கும் இல்லாதிருத்தல் வர லாற்று மோசடியின்பாற்படும்.

-வளரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான் உன்னைத் தேடுகிறேன்

**6** என் துஷ்யந்தா,

தமிழீழத்தின் சேந்தாங்குளத்திலே நாம் சந்தித்தோம். திரைகடலோடித் திரவியந்தேட நீ எண்பதுகளின் துவக்கத்தில் என்னை விட்டுச்சென்றாய். உன் பெயருக்கு ஏற்றாற்போலவே உன் 'சகுந்தலா' வை மறந்து விட்டாயா?

உன் வசந்த அழைப்புக்கு நான் காத்திருந்து களைத்துவிட்டேன்.

ஆனால், காலச் சக்கரம் விரைவாக சுழல்கின்றது.

நரையும் திரையும் என்னை அணைக்க எத்தனிக்கின்றன.

உன் நினைவுத் திரையில் என் உருவம் இன்றும் அழியாது இருக்குமானால், இளவாலை டியூட்டரியிலும், கீரிமலை ஓரத்திலும் நாம் பரிமாறிக் கொண்ட காதல் வாக்குறுதிகளை நீ மறந்திருக்க மாட்டாய். அந்த நினைவு இந்த 'அக்கினிக் குஞ்சு' வை வாசிக்கும் பொழுது உனக்கு உண்டாக வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சொந்தப் பெயரை வெளியிட முடியாத நிலையில் நீ எனக்குச் சூட்டிய பெயரின் மூலம் என்னை இனம்காட்டுகின்றேன்.

அன்புடன்
சகுந்தலா-மலர்விழி

**7** அன்பு சரத் சந்திரன்

பிரபல எழுத்தாளர் எஸ். பொ. வின் தம்பியான சரத் சந்திரன் (நண்பர்களால் சரா மாஸ்டர் என்று அழைக்கப் படுபவர்) இரண்டு வருடங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து கனடா செல்வதாக சொல்லிச் சென்றார். இதுவரை அவரிடமிருந்து எந்த தொடர்பும் கிடைக்கவில்லை.

நான் அவருடைய நீண்ட காலக் குடும்ப நண்பர். இப்பொழுது இந்த 'அக்கினிக்குஞ்சு' வின் துணை ஆசிரியர்களுள் ஒருவராகவும் பணியாற்றுகின்றேன். அவரை அறிந்த கனடா வாசகர்கள் யாராவது அவருடைய தற்போதைய முகவரியை அறியத் தருவார்களா? என் பெயர் எம்.ஏ.ரஹ்மான். இப்பொழுதும் சென்னை- கோடம்பாக்கத்திலே தான்வசிக்கின்றேன்.

**8** இனிய நண்பன் ராகவனுக்கு

இவ்வளவு காலமாக எவ்வளவோ பேரைக் கேட்டு விட்டோம் நீ எங்கேயென்று. இங்கிலாந்தில் என்கிறார்கள், நோர்வேயில் என்கிறார்கள். உன் விலாசத்தைத் தந்தவர் இல்லை. பல்கலைக்கழகக் காலத்து நினைவுகள் எவ்வளவு பசுமையாக இருக்கின்றன! உன்னுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறோம், உடனே எழுது.

அன்புடன்,
அவுஸ்ரேலியாவிலிருந்து **சீவா, மக்ஸ், சுதன், ஞானி, சுப், நித்தி.**








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேசம் நாடும் நெஞ்சங்கள்

லெ. முருகபூபதி

ஈழ மண்ணில் தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்து, அதில் தீர்வினைக் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகள் அனுமார் வாலைப்போன்று ஒரு புறம் நீண்டு கொண்டிருந்த போதிலும் மறுபுறத்தில் - ஆக்கிரமிப்புகள் அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டுதானிருந்தன.

இதனால் பாதிப்புற்றவர்கள் பெரும்பாலும் ஏதும் அறியாத அப்பாவிகள்தான். இன்று அவர்களின் வாழ்க்கை அவலப்பட்டுள்ளது.

''பங்கர்களில்'' சீவியம் நடத்தும் அந்த ஜீவன்களைப்பற்றி அந்நிய நாடுகளில் அனுதாப வார்த்தைகளைக் கூறிக்கொண்டிருப்பதில் இன்று ஏதும் பயன் இல்லை.

இந்த அனுதாப வார்த்தைகள் காற்றில் தான் கலந்துபோகும்.

''அக்கினிக் குஞ்சு''விற்கு ஒரு செய்தி, ஈழ மண்ணிலிருந்து கிட்டியுள்ளது. ஈழத்தின் வட பகுதியில் கோப்பாய் நகரில்- **மக்கள் நலன் காக்கும் பிரிவு** என்ற அமைப்பு தோன்றி, சுமார் 153 குடும்பங்களைப் பராமரித்து வருகிறது.

இக்குடும்பத்தினர், இந்திய அமைதி(?) காக்கும் படையினரால் தமது அமைதியை இழந்தவர்கள்.

வாழ்ந்த வீடு - சொந்தமாகியிருந்த உடைமைகள் - அனைத்தையும் இழந்து, பரிதவித்த நிலையில், மேற்படி மக்கள் நலன் காக்கும் பிரிவிடம் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த அனாதைக் குடும்பங்களுக்கு. சிறு தொழில் வாய்ப்பு, மற்றும் குடிமனை என்பவற்றை வழங்கி வரும் இந்தச் சமூக சேவை அமைப்பு, குறிப்பிட்ட அனாதைக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்காக தனியாக பாடசாலை ஒன்றையும் உருவாக்கிக் கொடுத்துள்ளது.

இது போன்ற அமைப்புகள் இன்றைய கால கட்டத்தில் மிகத் தேவையான ஒன்றாகும்.

தமது தாய்நாட்டில் சொந்தச் சகோதரர்களுக்கு நேர்ந்துள்ள இன்னல்கள் குறித்து அந்நிய மண்ணிலிருந்து அனுதாப வார்த்தைகளைப் பொழிபவர்கள், தமது வருடாந்த உழைப்பு வருமானத்தில், ஒரு சில சதவீதங்களை இத்தகைய புனர்வாழ்வுப் பணிகளுக்காக ஒதுக்கி, உரிய முறையில் வழங்குவார்களாயின் அதுவே பெரிய புண்ணியமாகும்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் :

**மக்கள் நலன் காக்கும் பிரிவு**
**இரபாலைச் சந்தி, கோப்பாய், இலங்கை.**

---

## பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

**விக்டோரியா இலங்கை தமிழ்ச் சங்கத்தின் 11-வது வருடாந்த பொதுக் கூட்டமும் 91, 92ம் ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் 17-3-91 ஞாயிறு மாலை 3 மணிக்கு CAMBERWELL உயர்தர கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.**

---

# குழந்தை

ஞானப்பிரகாசம் மொனிக்கா — சிங்கப்பூர்

**அன்று பச்சிளம்**
**குழந்தையாய் உன் மடியில்**
**பசியால் கதறினேன்......**
**உன்னையே கரைத்து**
**பாலை தாரை வார்த்தாய்......**

**இன்று அவனியிலே**
**துன்ப சுமையைத்தாங்காது**
**கதறுகின்றேன்......**

**அந்த நிம்மதியான இன்பத்தை**
**உன்னால் தாரை வார்க்க முடியாது......**

**என்றும் உன் மடியில்**
**குழந்தையாய் கதறிக்**
**கொண்டேயிருந்திருந்தால்**
**துன்ப சுமை புரியாத புதிராயிருந்திக்கும்**

**இப்போது புரிந்துவிட்ட**
**புதிருக்காய் அழுகின்றேன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




'**ஆதியும்** அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியை யாம் பாடக் கேட்டேயும்.........'

மார்கழிக் குளிர். இருளின் நிசப்தத்தில் அது நல்லாகக் கேட்கிறது. செல்லம்மா ஆவலோடு கேட்டுக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு நிச்சயமாகிறது. அவர்தான் படிக்கிறார். 'வாள் தடங்கண் மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்.........'

நல்லாகக் கேட்கிறது. முத்துவுக்கும் கேட்கும். இனி அவன் வந்துவிடுவான். செல்லம்மாவின் உடலில் ஒரு துடிப்புப் பற்றுகிறது. அவள் எட்டிப் பார்க்கிறாள். முன்னாலுள்ள சீமால் வேலிக்குப் பின்னாலுள்ள வேலியில் கிடக்கும் பொட்டால்தான் அவன் வருவான். 'வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய் மறந்து......'

வேலிப்பக்கம் ஒரே இருளாய்க் கிடக்கிறது. ஐந்துமணி கூட ஆயிருக்காது. அதோடு மழை மூடம். அந்த இருட்டில் முத்து முன்னால் நின்றால் கூடத் தெரியாது. அவனுடைய கன்னங்கரேர் என்ற உடம்புக்கும் இருட்டுக்கும் எந்த வித வித்தியாசமும் இருக்காது. செல்லம்மா லாந்தரை எடுக்க நடுவறைக்குள் போகிறாள். அவளைக் கேட்காமலேயே அவளின் காது கோயிலிருந்து வரும் ஓசையைக் கிர்கிக்கிறது. அவளுக்கு அவை தளர் பாடம்.

'ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே ஈதோ எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.' சேமக்கல ஓசையோடு சங்கூதல் தொடர்கிறது.

லாந்தரை எடுத்துக் கொண்டு அடுத்தறைக்குள் எட்டிப் பார்க்கின்றாள். பெரிய பெட்டை, சின்னப்பெட்டை எல்லோருக்கும் நல்ல நித்திரை. ஓசைப் படாமல் கதவைப் பூட்டிக் கொண்டு திரும்புகிறாள்.

பாடலுக்கு உரை சொல்லப்படுகிறது. அது அவருடைய குரல் அல்ல. பண்டிதர் நல்லதம்பியரின் குரல். திடீரென்று அவளின் கண்களை ஏதோ அமத்திப் பொத்துகிறது.

செல்லம்மா ஒரு கணம் பயந்துபோகிறாள். ஆனால் ஒரு கணந்தான். அடுத்த கணம் ''தூப்'' பென்று மெல்லத் துப்பிக்கொண்டு தன்னைச் சமாளித்துக் கொள்கிறாள். கண்களை மறைத்த கைகளை இழுத்து விலக்கிக்கொண்டு திரும்பிய போது திரும்பவும் உடலில் பழைய துடிப்புக் கூடுகிறது.

''பயந்திற்றியா?''

லாம்பு வெளிச்சத்தில் முத்துவின் வெள்ளைப் பற்கள் பளிச்சிடுகின்றன.

''தெறிச்சிருவ இளிக்கிறியா பேய்மாதிரி அமத்தியிற்று?'' என்று கோபிப்பவள்போல் பாவனை காட்டிக் கொண்டு லாந்தர் இருந்தெடுத்த நடுவறைக்குள் போக முயல்கிறாள் செல்லம்மா. முத்துவை வேண்டுமென்றே அப்படி திட்டுவது அவளுக்குச் சுவைத்தது.

நடுவறைக் கதவடியில் வைத்து முத்து அவளைப் பிடித்துக் கொள்கின்றான். உள்ளே அவனுக்குப் பழக்கமான அந்த மெத்தை போட்ட கட்டிலில் இரண்டு தலையணைகள் அடுக்கி வைத்த மாதிரியே கிடக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரவுப் படுக்கையின் அடையாள மாக அழுத்தம் ஒன்றும் அவ்வளவு இருக்கவில்லை. முத்துவால் செல்லம்மாவின் அப்போதைய நிலையை உணர முடிகிறது. அவருக்குத் திருவெம்பாவை விரதம்! முத்து தன் பிடியை இருக்குகிறான்.

''பனையில் ஏற்ற பழக்கம் போகாது, விடுவிளக்க வைக்க.''

செல்லம்மா வேண்டுமென்றே அவனை திட்டுகிறாள். அப்படிப் பேசும்போதே அவளுக்குத் தலையில் கிறுக்கம் ஏற்படுவது போல் ஆரம்பித்துவிடுகிறது. ஆனால் அப்படி ஒரு பேச்சைத்தான் அவரோடு - அவள் புருஷன் ஆறுமுகத்தோடு -அவளால் பேச முடிவதில்லை. அவரில் அவளுக்குக் கொள்ளை விருப்பம். அவரிடம் இருக்கும் நல்ல குணங்களை யாரிடமுமே அவள் இன்னும் காணவில்லை. ஆனால் அதனால் தானோ என்னவோ அவரிடம் ஏதோ குறை இருப்பதுபோல் செல்லம்மாவுக்கு இப்போது படத் தொடங்கியிருக்கிறது. அவரில் அவளுக்கு அன்பு உண்டு. அருகதை உண்டு. அவருக்காக வேண்டி அவள் எதையும் செய்யத் தயார். ஆனால் முத்துவில் அவளுக்கு ஏற்படும் இப்படியான ஒரு பைத்திய வேகத்தோடு வரும் வெறிகலந்த ஆசை மட்டும் அவர்மேல் அவளுக்கு ஏற்படுவதில்லை. ஏற்பட அவர் இடம் வைப்பதில்லை.

பத்து நாட்களுக்கு முன்பு தான் முத்துவுடன் செல்லம்மா முதன் முதலாகக் கதைத்தாள். முத்து கள்ளிறக்குபவன், நாடான். முன் வளவில் பனை சீவுபவன். ஆனால் அன்று அவனோடு கதைத்ததற்குப் பின் என்றுமே இல்லாத வகையில் உடலில் ஏதோ ஒன்று முதன் முதலாக கிளறப்பட்டதைச் செல்லம்மாவால் உணரமுடிந்தது. அதற்குப் பின் ஒரு தடுமாற்ற நிலை. காலையில் எழுந்து குளிப்பது, படத்திற்கு பூசை செய்து கும்பிடுவது, அவர் பள்ளிக் கூடத்துக்குப் போகமுன் சைவச்சாப்பாடு ஆக்குவது, பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்துக்கு விடுவது என்று பதினாறு வருடங்களாகப் போன வாழ்க்கையில் - கல்யாணங்கட்டி பதினாறு வருடங்களும் ஆகிவிட்டதே, பெரிய கமலத்துக்குப் பதினான்கு, சின்ன யோகத்துக்குப் பன்னிரெண்டு - பதினாறு வருடங்கள் நிதானமாகப் போன வாழ்க்கையில் திடீரென்று ஒரு சலனம் ஏற்படத் தொடங்கிற்று. ஆரம்பத்தில் வைரவர்கலையாக்கும் என்றுதான் அவள் நினைத்தாள். அப்படியும் அவளுக்கு வருவதுண்டு. பக்கத்தில் இப்போ அவர் பாடிக் கொண்டிருக்கும் சிவன் கோவிலில் திருவிழா ஏற்படும் காலங்களில் அப்படி அவளுக்குக் கலை வருவது வழக்கம். அப்படி ஒரு விறுவிறுப்பு முத்துவைக் கண்டபின் அவளின் மன நிலையில் விழுந்துவிட்டிருந்தது. ஆனால் அந்த விறுவிறுப்போடு அது நின்றுவிடவில்லை. அதற்குப்பின் அவளுக்கு ஏதோவெல்லாம் கதைக்கவேண்டும்போல் இருந்தது. ஏதோவெல்லாம் செய்ய வேண்டும்போல் இருந்தது. மூன்றாம்நாள் அவர் பள்ளிக்கூடம் போன பின் விறகெடுக்கப்போகும் சாட்டில் முத்துவரும் நேரம் பார்த்து முன்வளவுக்கு அவள் போய்விட்டாள்! அவளுக்கே தெரியாமல் நடந்த நிகழ்ச்சி போல் அது பின்பு பட்டது. கலையில் வரும் ஒரு மயக்க வேகம்! அதே வேகத்தில்தான் ஐந்தாம்நாள் முத்துவின் யோசனைப்படி திருவெம்பாவைக் காலம் தொடங்கியபின் விடியக் காலையில் அவர் கோயிலுக்குப் போனபின் அவனை வரவேற்கும் துணிவுகூட அவளுக்கு வந்திற்று. அதற்குப்பின்தான் அவரின் குறைகள் அவளுக்குத் தெரிய ஆரம்பித்தன. அப்படிச் செய்யக் கூடிய சக்தி அவளிடங்கூட இருந்திருக்கிறது என்பதை நினைக்க அவளுக்கே பயமாகவும் ஆச்சரியமாகவும் இருந்திற்று. ஆனால் அவர் கொடுக்காதவற்றோடு ஒப்பிடும்போது அவற்றைத் தாங்கிக்கொள்ள அவளால் முடிந்தது. அவர் மிகமிக நல்லவர். மிகமிக கடவுள் பக்தி. ஆனால் அதுதான் எப்படியோ இப்போ அவரின் குறையாகவும் பட்டது. பச்சையாக அவரிடம் எதுவுமே இல்லை. கழுவித் துடைத்து பூசிக்கீசி மறைத்து மரியாதை பார்த்துத்தான் அவர் எதையும் கொடுப்பார். முன்பு அவை எவையும் குறையாகப் படவில்லை. ஆனால் இப்போதான் அவளுக்கு வித்தியாசம் தெரிகிறது. அதோடு அவருக்கு முன்னால் அவளின் நிலை இரந்து வாங்கும் ஒரு பிச்சைக்கார நிலையேதான். கொடுத்து வாங்கும் ஒரு சமத்துவ வியாபாரம் இருப்பதில்லை. விளக்கு ஒருநாளும்

அமரர் மு. தளையசிங்கம் எழுத்துச் சத்தியம் மிக்கவர். நேர்மையான விமர்சகர். சக்தி வாய்ந்த ஆக்க இலக்கியகாரர். அவர் பிரசித்தப்படுத்திய சத்தியங்களுக்காக வாழ்ந்து காட்டியவர். இளவயதில் அவர் காலமாகியது ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பெரிய இழப்பாகும். 'புது யுகம் பிறக்கிறது' என்று அவர் எழுதிய கதைக் கோவையிலே, உண்மையான ஆண்மை பற்றி அவர் நடத்திய தேடலிலே விளைந்ததுதான் இந்த 'தொழுகை.'

-ஆர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிவதில்லை. களைந்து எதுவும் நடப்பதில்லை. பச்சையான பேச்சு, இப்படி ஒரு தலை கிறுக்கம் எதுவும் இல்லை.

செல்லம்மாவுக்கு முத்துவில் பிறந்த ஆசை வேகம் பிய்த்துக் கொண்டு ஓடுகிறது. "விடு, மூதேசி விளக்கை வைக்க!" என்று திரும்பவும் கோபித்த பாணியில் பேசுகிறாள்.

பிடியைத் தளர்த்தி, அறைக்குள் கட்டிலுக்கெதிரே இருந்த மேசையில் லாந்தரை வைப்பதற்குச் செல்லம்மாவை விட்டுவிட்டுப் பின்னால் வந்து முட்டியும் முட்டாமலும் நின்றான் முத்து. கோயிலில் இருந்து வரும் குரல் கேட்டுக்கொண்டே இருக்கிறது. 'தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனார்க் கன் பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.' டிங்டிங், பும்பூம். நேரம் எவ்வளவோ இருக்கிறதென்ற நிதானத்தால் செல்லம்மாவுக்குத் தைரியம் ஏற்டுகிறது. தொடர்ந்து லாந்தரைத் தொட்டுக் கொண்டு ஏதோ செய்பவள் போலவே அவள் நிற்கின்றாள். வெறும் பாவனை. வியாபாரத்தில் அவளுக்குரிய பேரம் பேசும் உரிமை, அவரோடு அனுபவிக்காத ஒன்று.

"அம்மாவுக்குக் கோபமாக்கும்?"

அவள் பேசவில்லை. லாந்தரில் இன்னும் ஏதோ வேலையிருக்கிறது.

முத்து ஒவ்வொன்றாக உடைகளைக் களைகிறான். அவனது கைகளிலும் ஒரு துடிப்பு. நடராசர் கடையில் கள்ளுக்குடிக்க வரும் ஒவ்வொருவரும் செல்லம்மாவைப்பற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். 'ஆறுமுக மாஸ்றற்ற பெண்சாதி ஒரு தங்கப்பவுண்' 'கடவுள் பக்தியான மனுஷி' முத்துவுக்கு உலகத்தையே வென்ற ஒரு திளைப்பு நெஞ்சை நிரப்புகிறது. சமத்துவம் பெற்ற களிப்பு வெறி. தாவணி, சேலை, உட்சட்டை, பாவாடை......

பதினாறு வருட வாழ்க்கையில் அப்படி விளக்கு வெளிச்சத்தில் ஒவ்வொன்றாக விழுவதை அந்த ஆறே ஆறு நாட்களாகத் தான் செல்லம்மா காண்கிறாள். முத்துவின் முழு உடலும் பச்சையாக முட்டுவதை அவளால் உணரமுடிகிறது. அடுத்தகணம் நேராகத் திரும்பி அவனை ஒரே அணைப்பாக அணைத்துக்கொள்கிறாள்.

"முத்து, உன்னில தான் எனக்கு ஆசை"

அவனுக்கு ஒரு வெற்றிப் பெருமிதம். ஆனால் இன்னும் அதை விளக்க வேண்டும் போல் படாமலுமில்லை. "அப்ப அவரில?"

செல்லம்மாவுக்கு கோயிலிருந்து வரும் அவர் குரல் கேட்கிறது. 'கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே விண்ணுக்கொரு மருந்தை, வேத விழுப்பொருளை......'

"அவரில எனக்கு அன்பு தான். அவர் செத்தால் நானும் செத்துருவன்" அவள் சொல்கிறாள். ஏதோ குழந்தைப் பிள்ளையைத் தடவி விடுவது போல் அவரைத் தடவி விடவேண்டும் என்ற ஓர் உணர்ச்சி அவள் மனதில் எழுகிறது. "அவரில எனக்கு உயிர். ஆனா உன்னில தான் எனக்கு ஆசை."

முத்துவுக்கு அவள் என்ன கருதுகிறாள் என்று பூரணமாக விளங்கவில்லை. ஓரளவுக்குத் தான் விளங்கிற்று. ஆனால் பேரம் பேசும் உரிமை மட்டும் இப்போ தன்னுடையது என்பதை மட்டும் அவனால் முற்றாக உணர முடிகிறது. அதோடு அவரைப்பற்றி இன்னமும் அப்படிச் சொல்கிறாளே என்ற ஒரு மெல்லிய கசப்பும் இல்லாமலில்லை. அதன் காரணமாய்த் தன் முக்கியத்துவத்தின் தன்மையை முற்றாக அறிந்து விட வேண்டும் என்ற துடிப்பு இன்

# எங்கள் வீட்டில்...

எங்கள் வீட்டிலும்
நாற்காலிகள் உண்டு;
வேறு வேறு மெத்திருக்கைகளும்
உண்டு, அங்கே-
அவைகளிலே எல்லாம்-
புத்தகங்களே
உட்கார்ந்திருப்பார்கள்!
என்னுடைய
புத்தகங்கள் மட்டுமல்ல.
அவைகளையே போன்ற-
ஏற்றமிகு புத்தகங்களும்
உட்கார்ந்திருப்பார்கள்!
என்னுடைய
உரைவீச்சுப் பிரதிகள்,
தட்டெழுதப்பட்ட
கட்டுரைப் பிரதிகள்-
இவர்களும் இருக்கைகளிலே
வீற்றிருப்பார்கள்! [தான்
எடுத்து அடுக்க
நேரமில்லையோ? என்று
யாரும் இரக்கக்
கேள்வி கேட்கக்கூடாது:
மேலே குறித்த
இவர்கள் எல்லோரும்
மனிதர்களையே
போன்றவர்கள்,
மனிதர்களையே
உருவாக்கும் மாண்புமிக்க
எங்கள் வீட்டுக்கு [வர்கள்;
வந்து போகிற
பலபேரை விட மிகமிக
வளமான வலுவான மனிதர்
இவர்களைக் கீழே [கள்!
உட்காரச் சொல்ல முடியுமா?
அலமாரிக்குள் அடங்கிக்
கிடவுங்கள் என்று தான்
சொல்ல முடியுமா?

**சாலய் இளந்திரயன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னுங் கூடுகிறது. அவளை அப்படியே தூக்கிக் கொண்டு போய் கட்டிலில் வளர்த்திவிட்டு கொஞ்சமும் கவலைப் படாதவன் போல் எட்டிப் போய் தூரத்தில் நிற்கிறான். "நான் மாட்டன், அவரட்டதான் போ"

செல்லம்மா படுக்கையில் கிடந்த படியே அவன் பக்கம் பார்வையைத் திருப்புகிறாள். வாழ்க்கையில் முதன் முதலாக நிதர்சனமாக அப்படி ஒரு காட்சி. சென்ற ஐந்து நாட்கள் கூடக் காணாத ஒரு பரிமாணம். கன்னங் கரேரென்ற நிறம். கறுப்பு, கறுப்பு...

அவரைப்போல் அவன் தொகதொகவென்று கொழுப்பாய் இருக்கவில்லை. மெல்லிய உடம்பு தான். ஆனால் அத்தனையும் ஒரு வேகத்தை அடைத்துப் பிடிக்கும் ஒரு இறுக்கத்தோடு அமைந்திருக்கிறது. கறுப்பு கறுப்பு...

பார்வை மெல்லக் கீழே இறங்குகிறது. அதோடு செல்லம்மாவின் தலையில் ஒரு கிறுகிறுப்பும் கூடத் தொடங்குகிறது. அவளால் அதைத் தடுக்க முடியாமல் இருக்கிறது. வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டே கிடக்கிறாள். தலையில் அந்தக்கிறுகிறுப்பு விறுவிறென்று ஏறுகிறது.

பக்கத்து சிவன் கோயில்...

மூலஸ்தானத்தில் இரு பெரும் தூண்களுக்கிடையில் தொங்கிக் கொண்டிருக்கும் பென்னம் பெரிய தூண்டாமணி விளக்கின் பின்னணியில் எண்ணெயின் வழுவழுப்போடு கன்னங்கரேரென்றுஎழுந்து நிற்கிறது லிங்கம்......ஐயர் கற்பூர விளக்கைக் காட்டுகிறார்...... சிவப்புத் தீபம் மேலே செல்கிறது, லிங்கத்தின் நுனிக்குச் செல்கிறது......

அரோகரா! அரோகரா! சுற்றி நிற்பவர்கள் கத்துகிறார்கள், கத்துகிறார்கள்......

செல்லம்மாவுக்குக் கோயிலில் கலைவரும் காட்சி நினைவுக்கு வருகிறது. உடலில் ஒரு பயங்கர வேகம். அரோகரா என்ற ஓசைப் பெருக்கத்துக்கு ஏற்ப உள்ளே ஏதோ ஒன்று பெருகுகிறது.

எண்ணெயின் வழுவழுப்போடு கன்னங்கரேர் என்று எழுந்து நிற்கிறது லிங்கம்... சிவப்புத் தீபம் மேலே செல்கிறது. மேலே செல்கிறது, லிங்கத்தின் நுனிக்குச் செல்கிறது.

செல்லம்மா கட்டிலைவிட்டு மூசிக்கொண்டு பாய்கிறாள். முத்துவைக் கட்டிப் பிடித்து இறுக அணைத்த வண்ணம் கட்டிலில் சாய்த்து அமத்துகிறாள். முத்துவின் அலைப்பு அவளின் வேகத்தைக் கூட்டுகிறது. உடல்களின் பிணைப்போடு வாய்க்குள் புகுந்த முத்துவின் நாக்கு எங்கோ போய்த் தொடுகிறது, எங்கோபோய்த் தொடுகிறது... முதுகிலிருந்து ஆரம்பித்து எலும்பு நீட்டுக்கு ஓடிக் கீழே கீழே வெளியே வெளியே எங்கோ எங்கோ... கீழே கீழே எங்கோ எங்கோ...

செல்லம்மா சோர்ந்து போகிறாள். அவளின் பிடி தளர்கிறது.

சிறிது நேரத்துக்குப் பின் முத்து எழுகிறான். பிடிதளர்ந்து மட்ட மல்லாக்காய் சாய்ந்த செல்லம்மாவின் தோற்றம் அவனைப் பிரமிக்க வைக்கிறது. உடலில் ஒவ்வொரு மயிர்க்காலிலும் துளிர்த்து மினுங்கிய வியர்வை ஒளியோடு போட்டி போட்டுப் பூரித்துப் பிரகாசித்த அவளின் முகம் அவனைப் புல்லரிக்க வைக்கிறது. எங்கோ பார்த்த தோற்றம். கோயில் சாத்துப்படி - ஸ்தான மூலையில் தங்கத்தால் செய்து நிற்கும் அம்மன் சிலையின் அருள் செறிந்த தோற்றம்! ஆறுமுக மாஸ்றற்ற பெண்சாதி தங்கப்பவுண் என்று ஊரார் சொன்னது அவனுக்கு நினைவு வருகிறது. இல்ல, தங்கப்பவுணில்ல. தங்கச்சிலை தெய்வச்சிலை, தெய்வம்!

கோயிலிலிருந்து குரல் கேட்கிறது.

'தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்துநஞ் சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக் கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப் பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்'...டிங்டீங்.பும்பூம்...

முத்துவின் உடல் புல்லரிக்கிறது. சோர்வை மறந்து அவனையறியாமலேயே செல்லம்மாவைப் பார்த்தவண்ணம் தானும் ஏதோ அப்படி முணு முணுக்கிறான். □

### நம் பழக்கங்கள்

ஒரு நாள் வைதீகரான என் நண்பர் வீட்டில் விருந்து. வாழையிலைச் சாப்பாடுதான். விருந்தாளிக்குத் தலையிலை போடப்பட்டது. இலையின் தலைப் பகுதி இடப்பக்கம் இருக்க வேண்டுமென்று இலையைச் சரி செய்தார். குவளையிலிருக்கும் நீரைக் கையிற் கொட்டி இலையைச் சுற்றி மூன்று தரம் வட்டமாகத் தெளித்தார்.

சாப்பாடு முடிந்தபின்னர், கைப்பழக்கத்திற்கான விளக்கங்கள் வெளி வருகின்றன. சாதத்துடன் கறிவகைகளைச் சேர்த்துப் பிசைவதற்கு, அகன்ற பகுதி வலப்புறமாக இருந்தால் வசதியாக இருக்குமாம். இலையிலுள்ள உணவை நோக்கி எறும்புகள் படையெடுக்கா வண்ணம் தடுப்பதற்காகவே இலையைச் சுற்றி நீரைத் தெளித்துவைக்கும் பழக்கம் ஏற்பட்டதாம். காகத்திற்குப் போட்டபின் உண்பது, நஞ்சு கலந்திருப்பதைக் கண்டறிவதற்காம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இரண்டு உலகம்

-தொடர் கவிதை

வெள்ளிக் கிழமை விடிவுறு பிரசவ
வேதனை எடுக்கிறது - அடி
வானஞ் சிவக்கிறது.
கள்ளத் துயிலுறு கலைபயில் விழிகளிற்
கண்ணிமை துடிக்கிறது - கடைக்
கண்ணிமை துடிக்கிறது

ஃ ஃ

துள்ளி விழுந்தெழு தொடர்கதை பலவகைத்
தூபம் இடுகிறது - அழல்
தூபம் இடுகிறது
உள்ளத் துணர்வுகள் உயிர்பெற உயிர்பெற
ஊற்றுத் தொடர்கிறது - நினை
வூற்றுத் தொடர்கிறது.

ஃ ஃ

தவழ்ந்த வுலகெது சாருல கெதுவெனச்
சலனம் எழுகிறது - மனச்
சலனம் எழுகிறது
வளர்ந்த வுலகெது வாழுல கெதுவென
வாதம் புரிகிறது - பிடி
வாதம் புரிகிறது.

ஃ ஃ

இழந்த தெவையெவை எய்திய தெவையெவை
இதயங் கேட்கிறது - சுழல்
இதயங் கேட்கிறது
தளர்ந்த மனமெது சாய்மன மெதுவெனச்
சன்னதங் கொள்கிறது - மனஞ்
சன்னதங் கொள்கிறது.

ஃ ஃ

(வேறு)

சன்னதங் கொண்ட நெஞ்சிற்
சஞ்சல நிழல் சாய்ந்தாடும்
தன்னலங் கொண்டா கண்ணா
தாயகந் துறந்தாய் இல்லை
பொன் பொருள் போகத்திற்கா
பொற்பொளிர் கோலத்திற்கா
நின்னடி வழுக்க வில்லை
நிலை தடு மாறல் ஏனோ?

ஃ ஃ

என்னதான் சொன்ன போதும்
என்னகம் ஓயவில்லை
வன்முறை வளைந்த கோல் முன்
வளர்ந்த தீ வடிந்த செந்நீர்
சின்னவர் எலும்புக் கூடு
சிதறிய பூமி எல்லாம்
என்னவை என்றோர் எண்ணம்
எழுந்து நின் றாடிற் றாங்கே.

□ □ □ □ □ □ □

எழுந்துநின் றாடு பாம்பும்
இசையலை வலையிற் சிக்கி
வளைந்துவந் தணையும் ஆடும்
வாய்திறந் தசந்தீ டாடும்
உளந்தடு மாறு மாந்தர்
உய்த்தறி சுழியிற் சிக்கின்
இழந்தவை மத்தாய் ஆடி
ஈர்த்துளம் ஊசலாடும்.

(வேறு)

உலகம் இரண்டிலெந்தன்
உளமூசல் ஆடியது
அலைகடலில் ஓடமென
ஆடித் தளம்பியது

தளம்பி அழுந்தி மனம்
தத்தளிக்கும் வேளையிலே
எழும்புங்கள் அப்பா
எனவந்தாள் என் எழிலி.

ஏழுமணி ஆகிறதே
எட்டுக்கு வேலையப்பா
நீளப் பயணமினி
நிற்பதற்கோ வேளையில்லை.

கோப்பியதில் சீனியிதில்
குளிர்பால் பிரிட்சிலென
மூப்பிளமை எண்ணாதோர்
மூச்சிலெலாம் சொல்லி நின்றாள்.

சொல்லி நின்ற சொற்கள்
சுழன்றென் மனதினிலே
வில்லெறிந்த வேல்போல்
விழுந்தழித்த தோர் கணமே

காலைகடுங் கோப்பியுடன்
கட்டிலிலே வீற்றிருந்து
சோலைக் குயிலிசையில்
சொப்பனங்கள் கண்டவன்தான்

சொப்பனமாய்ப் போனகதை
சொற்களிலே ஏறுமுன்னே
தப்பறியா அச்சிறிசின்
சால்புகளைப் பார்க்கின்றேன்

சொல்லிநின்ற நெஞ்சின்
சுமையளந்த உள்ளுணர்வில்
அல்லலுறு சேயின்
அவலநிலை தோன்றியது

உலக மிரண்டிலெந்தன்
உளமூசல் ஆடியது
ஊசலிட்ட உள்ளத்தில்
உண்மையலை ஓடியது

சலன வலையிலுளச்
சால்புயிர்த்த வேதனையில்
மெலியு மவளைவிழி
மேல்கீழாய் நோக்கியது

மேல்கீழாய் நோக்குகையில்
மேலாடைச் சீரழகும்
காலடியில் வந்து நின்று
காதை சொன்ன சொல்லழகும்

**கவிஞர் அம்பி**
பப்புவா நியூகினி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூந்தல் முகிலழகும்
கொஞ்சுமலர் சேரழகும்
சாந்த மதியழகும்
சால்பொளிர்ந்த சாந்தழகும்

செங்கமலப் போதின்
தேன்துளிசேர் நாவதிர்வில்
எங்கள் தமிழ் தவழ்ந்து
எற்றமுறு பேரழகும்

ஆல்போல் விழுதூன்றி
அன்னியரின் மண்ணிலுமெஞ்
சீலம் வளர்த்துநின்ற
செல்வியுளங் காட்டின காண்!

செல்வியுளங் கண்டமனம்
சீரழிந்தும் ஊசலிட்டும்
சொல்லும் நினைவுகளில்
கொந்தளித்த வேளையது

வளர்ந்த உலகொன்று
வாழுலகு வேறொன்று
தளர்ந்த மனமொன்று
தாழ்ந்த மனம் வேறொன்று

இழந்த உலகொன்று
ஈர்த்தவுல கின்னொன்று
தவழ்ந்த வுலகொன்று
சார்ந்தவுல கின்னொன்று

உலக மிரண்டிலவள்
ஊசலிட்டிங் கந்தரத்தில்
சலனந் தவி தவிப்பு...ஆம்
சஞ்சலத்தின் காரணி யார்?

குற்றமுள்ள நெஞ்சு
கூனிக் குறுகியது
சற்றவளைப் பார்த்துத்
தலைகுனிந்த தென் மனசு.

ஒய்வுறக்கம் இல்லாமல்
ஓடி டொலர் தேடுலகில்
மாய்வதற்கு வைத்த
மனமூசல் ஆடியது

ஆடிமனம் ஓய்வதற்குள்
அவளின் அவசரத்தை
நாடித் துடிப்பையெலாம்
நானுணர்ந்தேன்-ஆகையினால்

என்னை நினைத்தா
ஏனோ தயக்கமம்மா
சொன்ன தறிவேன்
சுணங்காதே போய்வாடா

போய் வா நீ மேலே
பொழுது சரிவதற்குள்
வாமேலே என்று
வழியனுப்பி வைத்தேன்நான்

(வேறு)

விடு விடு வென வடி
விரை கிற தொட ரடி
பட பட வென வெடி
பல தொட ரிடு நடை

தொட ரிடு நடை பல
தொனி களில் எதி ரொலி
சுடு மன விடர் பல
துளி யென விழு நிலை

துளி விழு விழி யவள்
தொடர் நடை பயில் வழி
அழி மன விழி யவள்
அக வியல் தொடர் வழி

அட இவள் நடை யுடை
அழ கிவை ஒரு கொடை
கொடை பல வுடை யவள்
கொதி மன மெவர் கொடை

அழ கியல் அவள் கொடை
அறி வியல் அவள் கொடை
உள வியல் உற வியல்
உல கியல் எவர் கொடை

பட பட் பட் பட
படி யடி விழு மடி
பட பட பட் பட்
படி யடி தொடு நடை

வேறு

படிகள் இறங்கியவள்
பாதையிலே செல்கின்றாள்
படையெடுப்பைப் பார்த்துப்
பலகணியில் நிற்கின்றேன்

பலகணியில் நின்று
படையெடுப்பைப்பார்க்கையிலென்
உலகியலை ஆய்ந்தும்
உய்த்தறிந்தும் நிற்கின்றேன்

-வளரும்

## ஈழத்துக் கல்வி வளர்ச்சி -2

போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில், நிலங்களைப் பதிவு செய்யும் தோம்பு முறை வந்தது. கிராமத்திலுள்ள, கல்வி கற்ற ஒருவரைத் தெரிவு செய்து, தோம்பு- 'கற்றிக்கீசம்' ஆகியவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டன. கற்றிக்கீசம் என்பதில் மதச் சார்பான கல்வியும் அடங்கும். இதுவே பாடசாலைக்கான வித்தாகவும் அமைந்தது. கிறித்தவர்கள் சட்டம்பு அல்லது சட்டம்பியாக நியமிக்கப் பட்டார்கள். இன்றும் ஆசிரியர்கள் சட்டம்பி என அழைக்கப் படுகிறார்கள்.

ஒல்லந்தர் ஆட்சி 1658-ல் இங்கு நிலை பெறலாயிற்று. போர்த்துக்கீசர் கத்தோலிக்கர்; ஒல்லாந்தர் புரட்டசுதாந்து மதத்தவர். இதனால் போர்த்துக்கீசர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கத்தோலிக்கர்களால் நாட்டின் கல்வியிலே தலையிட முடியவில்லை. அந்த உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது. இருப்பினும் ஒல்லாந்தரும் மதக் கல்வியிலும், மதப் பிரசாரத்திலும் பெரிதும் ஈடுபாடு காட்டினர். உயர்தரக் கல்வி பெற்ற உள்ளூர்க் குருமார்களைத் தயார் செய்வதற்காகக் கலாசாலைகள் ஏற்பட்டன. உபாத்திமார் என்போர் கல்வியை விருத்தி செய்தலை மேற்கொண்டனர். ஒல்லாந்தர் காலத்தில் எழுதப்பட்ட தோம்புகள் அக்காலத்தில் அரசாங்க கருமங்களுக்கு ஆதரவாக இருந்தவர்களை எவ்வாறு பயிற்றுவித்தார்களென்பதற்குச் சான்று பகருகின்றன.

-கல்வி மான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனலும் மலரு

# கொண்டோடி சுப்பர்

'உனக்குக் கோடி புண்ணியம் கிடைக்குமப்பா... ஊர் விடுப்புகள் கதைக்கிறதிலை பொழுது பறக்குது. உந்தச் சுண்ணாம்பு கறட்டி பத்திப் போனது உன்ரை கண்ணுக்குத் தெரியேல்லையே? கொஞ்சம் தண்ணி பனிக்கி இளக வையுமன்... பத்தியமா ஒரு வாய்க்கு வெத்திலை போட ஏலாமலும் கிடக்கு...' என்று மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர், ஈச்சேரில் படுத்துக் கிடந்து புழுதி கிளப்பினார்.

'நான் உந்த மனுஷனைக் கெடுத்து வைச்சிருக்கிறன் தங்கச்சி. பக்கத்திலை தண்ணிச் செம்பு கிடக்கு. கொஞ்சம் பனுக்கி வைச்சால் ஏதோ கழண்டு விழுந்திடுமாக்கும்... நாங்கள் ரெண்டு பேர் குந்திக் கொஞ்சம் ஆத்திகேட்டுக்குக் கதைச்சுக் கொண்டிருந்தால், நரசிம்மருக்குத் தலை வெடிச்சுப் போகும்...' என்று வக்கணைச் செல்லாச்சி கொம்பு முறித்தாள்.

'ஏதோ சமா நடக்குது போலை' என்பதை அனுமானித்த கொ.சு. மெல்ல எழுந்து, நெட்டி முறித்து, எட்டிப் பார்த்தார். விண்ணானம் விசாலாட்சியுடன் இவ தாளிச்சுக் கொண்டிருப்பது தெரிந்தது. இடக் கையில் கடிதம் ஒன்றை வைத்துக் கொண்டு, வி.வி. முகத்தில் காட்டிய பாவங்களையும், வலக்கை விரல்களாலே தெளித்த அபிநயங்களையும் பார்த்ததும், ஏதோ வெளிநாட்டுப் புதினம் அலசப்படுகின்றது என்பதை ஊகித்தார். ஊர றிஞ்ச உண்மை. விண்ணானம் விசாலாட்சி ஒரு கைவலியம். எந்தப் பேப்பரிலும் வராத புதினம் கூட அவவுக்கு வரும். அத்தோடு சித்திரக் கதைக்காரி! கொ. சு. வுக்கோ முஸ்பாத்தி கண்ட இடம் சொர்க்கம். யாழ்ப்பாணத்து வீராங்கனைகள் இருவர் கதைத்துக் கொண்டிருந்த இடத்திற்கு கொ.சு. அசுப்பிடாமல் வந்தார்.

'இது எந்தக் கந்தையா எண்டதுதான் புடிபடேல்லை...' என்று உண்டியல் முட்டியைக் கவிழ்த்துக் கிலுக்குபவளைப் போல வி. வி. தலையை ஆட்டினாள்.

'ஓமோம். கந்தையா எண்டால் ஊரிப்பட்ட கந்தையா தான். கிளாக்கர் கந்தையா, நொத்தாரிஸ் கந்தையா, சார்ஜண்ட் கந்தையா, கம்யூனிஸ்ட் கந்தையா, குளறி கந்தையா, புரோக்கர் கந்தையா, ஓவிசியர் கந்தையா, காட்டுவாடி கந்தையா, கறடி கந்தையா, மிலாத்தி கந்தையா, மத்தாப்புக் கந்தையா, அலுகோசு கந்தையா, பண்டிதர் கந்தையா, அகராதி கந்தையா, கோழ்மூட்டி கந்தையா, கசவாரம் கந்தையா...' என்று ஒரு பெரிய கந்தையா பட்டியலை அடுக்கியபடியே, கொ. சு. அவர்களுடைய கதைக்குள் புகுந்து கொண்டார்.

'இது பேராசிரியர் கந்தையாவாம்...அதுவும் தமிழ்ப் பேராசிரியராம். நானுமெண்டால், இந்த யாழ்ப்பாணச் சீமையிலை விபுலானந்தர் துவக்கம் சிவத்தம்பி வரை பல பேராசிரியர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறன்... இந்தக் ...' என்று வி. வி அங்கலாய்த்தாள்.

'ஓ... அந்தக் கந்தையாவே?... எணெய் டான்ஸ் டீச்சர் ஜெயலட்சுமியின்ரை புருஷன் சைவம் கந்தையாவும் கொஞ்ச காலம் தமிழ் டிப்பாட்மெண்ட்டிலை...' என்று கொ. சு. தமது தொண்டையைச் சரி செய்வதற்கிடையில், 'அண்ணன் நீங்கள் சொல்லுறது அந்தக் கந்தையாவையே? ஜே ஆருக்கும் பிரேமதாஸாவுக்கும் ஏதோவெல்லாம் கழுவித் திரிஞ்ச அந்தக் கந்தையாவே? எங்கடை தமிழ்ச்சனம் எல்லாம் 1983ஆம் ஆண்டிலை சங்காரஞ் செய்யப்பட்ட பொழுது, 'யுத்தம் என்றால் யுத்தம்' 'சமாதானம் என்றால் சமாதானம்' எண்டு அந்த வேதாளம் கொக்கரிச்சதையும் தமிழ் வானொலியிலை பேசின இந்த வெங்கணாந்தி கந்தையாவே...' என்று வி வி. சந்நதம் ஆடினாள்.

'சரியாச் சொன்னாயணை விசாலாட்சி... அவரேதான்... The one and only original சிங்கள தாஸ கந்தையா! பிரேமதாஸா அவருக்கு மட்டுமே தேசிய விருது குடுத்தவர்? அவருடைய மச்சானுக்கும் அல்லே ஏதோ





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாசூரிப் பட்டம் குடுத்தவர்...? அந்தக் கலாசூரி பிரேமதாஸருக்குப் பக்கத்திலை விளக்குப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறது போலை ஒரு கலர்ப்படம் கொஞ்சக் காலத்துக்கு முந்தித் தினகரனிலும் வந்திருந்துது... அவருக்கு இப்ப என்னவாம்?'

'அவருக்கு ஒரு கோதாரியுமில்லை. அவுஸ்ரேலியா - சிட்னியிலுள்ள தமிழ்ப் பிள்ளைகளைத் தான் இப்ப சனீஸ்வரன் பிடிக்கப் பாக்கிறானாம்...' என்று வ.செ. குறுக்கிட்டாள்.

'முதலிலை விஷயத்தைச் சொல்லிப்போட்டு, பேந்து உங்கடை comment ருகளை அடியுங்கோவன்...' என்று கொசு பரிதவித்தார்.

'அங்கை எங்கடை பிள்ளையளுக்குத் தமிழ் வகுப்புகள் நடத்துகினமாம். இவர் தமிழிலை பெரிய டொக்டர் எண்டு, இவரையும் தமிழ் வகுப்புகள் எடுக்கச் சொல்லிக் கேட்டவையாம்...அதுக்கு அவர் என்ன சொன்னவராம் தெரியுமே?...' என்று தக்கு வைத்து வி.வி. நிறுத்தினாள்.

'சொன்னாத்தானே தெரியும்? நான் என்ன சாத்திரி கணபதிப்பிள்ளையே?...நான் கொண்டோடி சுப்பரெணை...டோர்ச் லைட் போல இருக்கிற உந்த அருமந்த கண்களுக்கும் கண்ணாடி போடுற யோசினையோ?' என்று கொசு இலேசாக நோண்டினார்.

விண்ணாணம் விசாலாட்சி வெட்கத்துடன் ஒருக்கா நெளிஞ்சா. 'இப்பவும் உவள் வட்டுறுப் பாத்தான் இருக்கிறாள்' என்று குறுக்கிழையில் அவர் மனசில் ஊர்ந்த எண்ணத்தை வக்கணைச் செல்லாச்சி ஒரு செருமல் மூலமே கெடுத்துப் போட்டா!

"தமிழ் வகுப்புகள் சும்மா எடுத்தால், தமிழருக்கு ஒரு மதிப்பில்லாமல் போயிடும்...' எண்டு சொன்னவனாம்...அப்பிடி எண்டால் என்ன அர்த்தம்? காசு குடுத்தால் தமிழும் சொல்லிக் குடுப்பான்; காசு குடுத்தால் சிங்களவன்ரை காலையும் கழுவிக் குடிப்பான்...'

'எளிய தட்டுவாணி அப்பிடியே சொன்னவன்? விளக்குமாத்தாலை சோப்ப அங்கை... சிட்னியிலை—ஒருத்தி இல்லையே?' என்று வ.செ. ஆவேசமாகக் கேட்டாள். பெண்டுகள் இருவரும் கலாநிதி கந்தையாவை வலு மும்முரமாகக் கந்தப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, கொண்டோடி சுப்பர் அவரைப் பற்றி வெள்ளாட்டு மேய்ச்சல் ஒன்று நடத்தினார்.

□ □ □

**யார்** என்ன சொன்னாலும், கந்தையா மகா விண்ணன்தான். அவருடைய சாதனைகளை அவர் ஒத்த அறிவுள்ள யாரும் சாதிக்கவில்லை. பேராசிரியர் கணபதிப் பிள்ளை செத்ததும், பேராசிரியர் பதவிக்கு நடந்த குத்து வெட்டுக்களை இப்பொழுது சொன்னாலும் சந்தி சிரிக்கும். அந்த இழுபறிகளில் நடந்த ஒப்பந்தங்களுள் ஒன்றாகத்தான், கொழும்பிலே 'சைவம்' படிப்பித்துத் திரிந்த இந்தக் கந்தையாவைத் தூசு தட்டி எடுத்து, இந்தியாவிலை 'அடிச்சிட்டு' வந்த இவருடைய 'ஐம்பது ரூபா எம். ஏ. க்கும்' ஒரு மவுசு காட்டி, இவரை ஒரு 'லெக்சரர்' ஆக்கினார்கள் என்பது உண்மை. பிறகு சாதித்தவை எல்லாம் கந்தையாவின் கெட்டிக்காரத் தனந்தானே? மறுக்க முடியுமே? சும்மா பொறாமையில் ஆட்கள் வாய்க்கு வந்ததைச் சொல்லலாம். வீட்டிலே பேடு கூவப் பொழுது விடிந்தால் என்ன? சிறிமா கோலோச்சிய நாட்டிலே இதுவும் ஒரு இளக்காரமோ? ஈழத்திலிருந்து கலாநிதிப் பட்டம் பெற எத்தனை பேர் இங்கிலாந்துக்குப் போனவர்கள்?

**ஈழத்துக் கல்வி வளர்ச்சி -3**

1802-ல் இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாயிற்று. 1815-ல் கண்டி தனது சுதந்திரத்தை இழக்க, தீவு முழுவதும் அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டது. இத்துடன், எல்லாப் பகுதிகளையும் நேரடி நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவருவதற்காகக் கற்பாதைகள் அமைப்பதில் ஆங்கிலேயர் பேரார்வங் காட்டினர். இதனால் போக்குவரத்து வசதிகள் மட்டுமின்றி, கல்விப் போக்கும் மாறுவதாயிற்று. ஒல்லாந்தர் சிறிய கிராமியப் பாடசாலைகளை மத பிரசாரத்திற்கு உபயோகித்தனர். ஆனால், இதனால் 1500 பவுண்கள் செலவாகுகின்றது என்பதை அறிந்த ஆங்கிலேய அரசாங்கம், அத்தகைய பாடசாலைகளை ஆதரிக்க மறுத்தது. இதனால் மதச் செல்வாக்குக் குறைந்ததினால் இங்கிலாந்தில் ஏற்பட்ட கிளர்ச்சியும், ஆங்கிலக் கல்வி பெறும் அசிரத்தை ஓங்கியமையும் ஆங்கில அரசாங்கத்தை இவ்விஷயத்தைப் புனராலோசனை செய்யத் தூண்டின. முதலில், அரசாங்கம் தானே பாடசாலைகள் நடத்த முற்படாமல், புரட்டசுதாந்து இயக்கத் தலைவர்களிடம் கல்விப் பொறுப்பை ஒப்படைத்தது. அரசாங்கம், அவர்களுக்கு நில வசதியும், பணமும், பிற வசதிகளையும் கொடுத்துதவியது. ஆனால், காலப் போக்கில், அரசியல் அமைப்புகளில் மாறுதல்கள் **கோல்புறூக்** சீர்திருத்தத்துடன் ஆரம்பிக்கவே, சட்ட பூர்வமாக அரசாங்கம் கல்விக் கொள்கைகளிலே தலையிடுதல் என்பது தவிர்க்க முடியாததாயிற்று. **-கல்விமான்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனைவியைக் கொண்டு 'கலைக் கடை' திறந்து காசு உழைக்கவும் சம்பாதித்ததைக் கொண்டு வரவும் முடிஞ்சதே? சம்பாத்தியத்திற்கு மத்தியிலும் 'முக்கித் தக்கியோ', 'பொறுக்கிக் கிறுக்கியோ' வந்த அலுவலையும் முடிக்கிறது கெட்டித்தனம் அல்லோ?

தனஞ்ஜெயராஜசிங்கத்தின் இடத்தினைக் கொஞ்சக் காலம் என்றாலும் நிரப்புவது 'அசுப் புசுப்பான்' வேலையோ? அது கிடக்கட்டும். முற்போக்கு இலக்கியப் பீடாதிபதிகள் கைலாசபதியும் சிவத்தம்பியும் என்ன செய்தவர்கள்? இலக்கிய விமர்சனம் செய்தவர்கள். புத்தகங்கள் எழுதியவர்கள். நாற்காலிக் கம்யூனிஸம் பேசியவர்கள். தங்கள் புகழ் பாடவும் ஒரு மாணவர் வட்டத்தை உருவாக்கியவர்கள். ஆனால், பட்டம்-பதவிகளுக்கு பலாங்கொடை அம்மாவின் முந்தானை முடிச்சைத்தானே நம்பியிருந்தவர்கள்? கந்தையா 'சுத்த சிங்கள வீர'னான அநுரா பஸ்டியானின் வாலைப்பிடித்துத்தான் முன்னேறினார். உண்மை. முந்தானையிலும் பார்க்க வால் கேவலமே? 'வாலர்' அநுமாருக்குப் பொங்கல் செய்யிற சாதி அல்லோ நாங்கள்? 1983இல், கொழும்பில், தமிழ்ச் சனங்களைச் சங்காரஞ் செய்த பெருஞ் சிங்கள வீரர்களுள் பஸ்டியன் ஒருத்தன் என்பதை மறுக்க முடியுமோ? சிரில் மத்தியுவிக்கு இணையான வீரனாக்கும்! சொந்தத் துவக்கும் கையுமா அல்லோ திரிஞ்சவன்? அவனுடன் சிநேகிதமாக இருப்பது என்றால் கொஞ்ச நஞ்ச POWER ரோ? அது போகட்டும். கலைச் சேவைக்கு வருவம். 'லண்டனிலை டான்ஸ் பழக்கினவ' என்றால் தமிழ்ச் சனம் கந்தையாவின் மனைவியை மொய்க்காமல் விடுவார்களோ? போட்டியோ போட்டி! அவரிடம் நாட்டியம் பழகிய மாணவிகளுடைய அரங்கேற்ற விழாக்களைக் குத்தகை எடுத்து நடத்துவதிலும் பார்க்கச் சிறந்த கலைப் பணி இருக்க முடியுமோ? 'இந்தப் பீத்'தமிழரின் விழாவுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைத் தலைமை தாங்க அழைக்க யாரால் முடியும்? கந்தையாவால் மட்டுமே! இதை அறியாமல் 'தமிழன் தலைமை தாங்க வேண்டும்' என்று பெண்ணைப் பெற்ற மகேஸ்வரன் முரண்டலாமோ? கந்தையாவா? கொக்கா? 'அவன் ஒரு புலி' என்று ஒரு சொல்லுத்தானே கந்தையா போலீசுக்குத் தெரிவித்தது. போலீஸ்காரன்கள் மகேஸ்வரனைத் துவைத்து மாவாக்கிப் போட்டாங்கள். இப்ப இந்த மகேஸ்வரனுடைய குடும்பம் எங்கே? யாருக்குத் தெரியும்? தமிழ்ப் பற்றுள்ள தமிழ்க் கலைக் குடும்பத்தை விலாசம் இல்லாமற் செய்யும் மேலான இத்தகைய கலைத் தொண்டினைக் கந்தையாவைத் தவிர வேறு யாராலே சாதிக்க முடியும்? He is a class! ஒரு நாடகம் எழுதியதில்லை. நடித்ததில்லை. பழக்கியதில்லை. ஏன்? ஒரு 'ஆனமான' நாடகத்தைப் பார்த்ததும் இல்லை. நாடக மேடைக்குத் திரை எப்படிக் கட்டுவது என்று கூடத் தெரியாது. அப்படி இருந்தும், இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடகக் குழுவுக்குத் தலைவராவது என்றால் லேசான காரியமோ? கந்தையாவைத் தவிர யாரால் முடியும்? சிவில் சேர்விஸ் கொம்பன் லோகேஸ்வரன் துவக்கம் எழுத்தாள வம்பன் எஸ். பொ. வரை நாடகக் குழுவிலிருந்து கழரச் செய்வது என்றால், தலைவரின் அளப்பரிய கலைச் சாதனைகளுக்கு வேறு சான்றுகளும் வேண்டுமோ? ஹூருளை மட்டுமோ? இராஜதுரையின் அமைச்சின் கீழ் தமிழ் நாடகக் குழு வந்த பொழுது என்ன நடந்தது? 'கந்தையாவை நாடகக் குழுவிலே நியமிக்க வேண்டாம்' என்று எத்தனை பேர் காவடி எடுத்தவர்கள்? 'கந்தையா இல்லாமலும் நாடகக் குழுவோ? காக்கை வன்னியன் இல்லாத கூத்தோ?' என்று 'சங்கிலியன்' இராஜதுரை எல்லாருக்கும் பாடம் படிப்பித்தார்!

இன்னொரு வகையிலும் கந்தையா படு கெட்டிக்காரன். விரிவுரைகள் நடத்துகிற வில்லங்கமும் இருக்கக்கூடாது. பேராசிரியர் என்கிற பவிசும் இருக்க வேணும். நீரில்லாமல் நீச்சலடிக்கும் அற்புத வித்தை! Open University யினால் இரண்டையும் சாதித்தார். மூன்றாம் சாதனையும் உண்டு. தூங்கலாம். ஈ ஓட்டலாம். இடையிடையில் Distance Learning பற்றி ஆங்கிலத்திலே வந்த சரக்குகளை 'வைத்துப் புத்தகங்கள் எழுதலாம். எல்லாவற்றையும் 'பொடியன்'களுக்கும் 'டூப்' அடித்துக் கொண்டு, கொழும்பில் இருந்து கொண்டே செய்யிறது பெரிய வித்தைதான். தமிழ் நாட்டில் எழுத்துச் சீர்திருத்தங்கள் பற்றி வீரமாமுனிவர் காலத்திலிருந்து பெரியார் - எம். ஜி. ஆர். வரை பேசியது மட்டுமல்லாமல், எத்தனையோ சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டன. கும்பகர்ணத் தூக்கத்திலிருந்து விழித்து, எழுத்துச் சீர்திருத்தங்கள் பற்றி எண்பதுகளின் இறுதிக் கந்தாயத்திலே வானொலியையும் ரூபவாகினியையும் முடுக்கிவிட ஒரு கந்தையாவால் மட்டுமே முடியும், இடித்த மாவை இடிப்பது என்று பொறாமைக்காரர்கள் சொல்லலாம். தமிழர் மானத்தை, எழுச்சியை, தமிழ் நேசிப்பை, ஓர்மையை, சுதந்திர தாகத்தை, விடுதலை வெறியை சிங்கள இனக் கொதியர்களுக்குக் காட்டிக் கொடுக்கும் பணியில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சமையல்

**ஆறரை** மணிக்கு சிவானந்தம் வீட்டிலை நிக்கவேணும். இரவு பன்னிரண்டு மணி வரை -புது வருஷம் பிறக்கும் வரை- கொண்டாட்டம் எண்டு சிவா சொல்லிப்போட்டார். என்ர இவ எங்கட பங்குக்கு பயத்தங்காயில் ஏதோ இணக்கிறா.

'மணி ஆறாச்சு. ஆறரைக்கு நிக்கவேணுமல்லே? உந்தச் சமையல் எப்ப முடியும?' -இது நான்.

'அது நேரமிருக்கு. நீங்கள் பிள்ளையளை வெளிக்கிடுத்துங்கோ...'

'அதுவும்- சரிதான். ஆறரைக்கு போனால் மரியாதையில்லை. லேற்றாய்ப் போய் நேரமில்லாமல் நாங்கள் படுகிற அவதியைப்பற்றி கொஞ்சநேரம் கதைக்கலாம்.'

'விசர் கதையளை விட்டிட்டு வெளிக்கிடுங்கோ...'

சிவானந்தம் வீட்டுக்கு போய்ச்சேர ஏழரை மணியாகிவிட்டது. மனைவி மகன் சகிதம் மூர்த்தி ஏற்கனவே வந்திட்டார். அவர் எப்பவும் பந்திக்கு முந்தி நிற்பார். கொஞ்ச நேரத்தில் குணபாலன், மனைவி இரு பிள்ளைகளுடன் குடும்ப சமேதராய் தரிசனமானார். சிவா வரவேற்கிறார்.

'என்ன லேற்? காட்ஸ் விளையாட உங்களைத்தான் இஞ்சை பார்த்துக் கொண்டிருக்கினம்.'

'நாங்கள் ஏளியாய்தான் வெளிக்கிட்டனாங்கள். அப்பதான் இவவின்ர பிறதர் லண்டனிலிருந்து கோல் எடுத்து விஷ் பண்ணினார். விட்டால் மறந்து போகுமெண்டு நாங்களும் ஸ்ரேற்றிலை இருக்கிற சிஸ்ரர் இன்லோஇற்கும் கோல் எடுத்து விஷ் பண்ணிவிட்டு வர நேரமாயிட்டு...'

மனிஷியின் புகழிலை குளிர்காயும் அந்த மனிசன் நோர்வேயிலை இருக்கிற சொந்த தம்பியை மறந்து போனார். எங்கடை படிப்போடை நோர்வேயிலை செட்டில் பண்ண ஏலாது. சுத்து மாத்து வழி எண்டுதான் நினைப்பினம். சபைகளிலே பேசும்போது நோர்வே போன்ற நாடுகளிலுள்ள சொந்தக்காரர்களை மறக்கிறதுதான் புத்தி.

காட்ஸ் விளையாட்டு ஒரு குளிர் பானத்தோடு துவங்கியது. எல்லாம் வீட்டுக்கு வெளியே கதிரை போட்டு நடந்தது. 'சமர்' வெக்கைக்கு வெளிதான் நல்லது எண்டு சிவா மனைவி சொன்னா. மனிஷியின் சொல்லுக்கு சிவாவின் வீட்டில் அப்பீலே கிடையாது. அவ

---

ஆயிரம் இயக்கப் 'பொடியன்கள்' (Including டமப்பர்) தேவானந்தா) 'தலையாட்டி'னாலும், சிங்களப் படைக்குச் 'சூல்' பிடித்தாலும், கந்தையா தன்னந்தனி மனிதனாகச் செய்த பணிக்கு ஈடாகமாட்டாது. கந்தையா நேர்மையான வியாபாரி என்பது இன்னொரு பிளஸ்Point. விற்க என்று வந்த பிறகு 'கால்' 'அரை' என்று முகமன் பார்க்கிறதே! Whole Sale ஆகச் செய்வதுதான் வடிவு. இந்த வரலாறு காலங் காலமாகப் பேசப்படும் என்பது திண்ணம். இத்தனையும் சாதிக்கும் வல்லமை கந்தையாவுக்கு எப்படி வந்தது? ஒரு கையில் வீணையும், மறு கையில் வயலினும், காலிற் சலங்கையும் கட்டிய அந்த சகல ரட்சகி-மகமாயி ஜெயலட்சுமி அம்மாவுக்குத்தான் வெளிச்சம். ஓமோம்; வெளிச்சமும் இருட்டும் அவரவர் சுதந்திரம்!

□ □ □

'என்னண்ணன்? நீள் கயித்திலை யோசிக்கிறயள்...?' என்று விண்ணாணம் விசாலாட்சி கேட்ட பொழுதுதான், கொ.சு., கந்தையா புராண படனத்திலிருந்து விடுபட்டார்.

'இஞ்சை விசாலாட்சி.அவுஸ்ரேலியா ஒரு பெரியநாடெணை. Multi culturism ஒரு கண்டம். எண்டு எல்லா நாட்டவன்களும் அங்கை வாழுறான்கள். அதை ஆயிரம் கந்தையாக்களாலும் பிசக்கேலாது. இங்கை பொடியன்களோடை அண்டலிக்கேலாது எண்டுதானே அங்கை ஓடியிருப்பார்? பாவம். சதா அருள் பாலிக்கும் ஜெயலட்சுமி கடாட்சத்தால் அவர் இசை-நடனப் பள்ளிகளை ஒரு சைட் பிஸினஸ் போலை துவங்கினால்,இந்த சிட்னித்தமிழருக்கு என்ன?அதுக்காகத் தமிழ் வகுப்பு எடுக்க வேணும் எண்டு இருக்கே? இவரிட்டைத் தமிழ் படிச்ச ஒருத்தரும் உருப்படல்லை எண்டது அவையளுக்குத் தெரியாது தானே?... அவர் Second Hand கார் யாவாரம், அல்லது 'ஆப்பக்கடை' என்று வாலாயமான தொழிலைச் செய்யட்டும். அங்கை 'ஆண்டவன்ரை ஊரிலை ஏண்டவன்ரை பாடு' எண்டு வாழ்றதுதான் புத்தி...' என்று கூறிய மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர் தமது கொட்டிலுக்குள் நுழைந்து, மான் தோலை ஒரு தடவை உதறி, மீண்டும் ஈச்சேரிலே போட்டார்.

□



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சிறுகதை

சந்திரானந்தன்

கொண்டு வந்த சீதனபாதனம் கொஞ்ச நஞ்சமே? அப்பிடி சொல்லாவிட்டாலும், அவ வந்த பிறகுதான் அவர் காசு பணத்தால் வாங்கக் கூடிய சுகங்களை அநுபவிக்கத் துவங்கியவர்.

காசின்ரை அருமை அவவுக்கு நல்லாத் தெரியும். 'சமர்' ஒரு சாட்டு. போன கிழமை பெயின்ற் அடித்த வீட்டை ஒரு நாள் கூத்தில் பழுதாக்கக் கூடாது எண்டது அவவுக்குத் தெரியும். பகட்டை பாதுகாக்க பிறந்த பிறவி.

தாங்கலாம். ஆனால் இந்த சிட்னி வெய்யில் தோலை எரிச்சுப்போடும்.'

மிஸிஸ் சிவாவிற்கு சிட்னியை குறை சொன்னால் பிடிக்காது. அவுஸ்திரேலியாவில் மெல்போனில் வந்திறங்கி வாழத் தலைப்பட்டு, சிட்னிக்கு வந்த இடத்தில், இது பிடித்துப் போக, இங்கேயே குடியேறியது சிவா குடும்பம். வழக்கம் போல இதுவும் திருமதியின் தீர்மானப் படியே நடந்தது.

சிட்னி வெய்யில சமரிலை



மூர்த்தி வீடு வாங்கி ஒரு மாதமும் ஆகவில்லை. அவர் போகிற இடமெல்லாம் வீட்டைப் பற்றி கதைக்காவிட்டால் பத்தியமில்லை. எப்பிடி புது வீடு? எண்டு சிவா கேட்க, அது தான் சாட்டு எண்டு மூர்த்தி தொற்றிக் கொண்டார்.

'வீடு பறவாயில்லை. ஆனால் வெக்கைதான் தாங்கேலாது.'

'யாழ்ப்பாண வெய்யில் மட்டும் தானே? ய'வ்னாவிலை வெய்யில் மட்டுமே? அந்த புழுதியிங்கை இருந்தால் இவருக்கு ஆஸ்மாவும் கூடிப்போகும்! —மிஸிஸ் சிவா.

மிஸிஸ் சிவாவிற்கு சிட்னியைக் காப்பாற்றிய திருப்தி.

'காப்பெற்'றைக் காப்பாற்றுவது எப்படி என்ற திசையில் கதை தாவியது.

'கணேசன் நல்ல வீட்டை வாங்கி பாவிக்க தெரியாமல் கெடுத்துப் போட்டார்.'

'அதுக்கு தவக்குமார் தான் சரி. என்ன மாதிரி மனுஷன் வச்சிருக்கு. எந்த நேரமும் மனுஷன் ஏதாவது செய்து கொண்டுதான் இருப்பார்...'

'ஓமோம். அவர் நடக்கிற இடமெல்லாம் காப்பெற்றுக்கு மேலை பிளாஸ்ரிக் கவர் போட்டிருக்கிறார்.

"றெயிலிங்கும் போட்டு இதால் நடக்கவும்' எண்டு ஒரு போர்டும் போட்டிருந்தால் கண்ட இடத்தில் கால் வைக்காமல் நாங்களும் கவனமாய் இருக்கலாம்...' எண்டு நான் 'பொடி' வைத்தது அவ்வளவாக எடுபடவில்லை. இங்கு சனங்கள் வீடு வாங்குவது பராமரிக்கிறத்திற்கோ சீவிப்பதற்கோ எண்டு விழங்கேல்லை.

லிங்கம் மனைவி மகளுடன் வருகிறார். இவர்தான் சிவாவின் வயதுக்கு ஏற்றவர். மற்றவர்கள் இளையவர்கள். பிறர் சமைக்கும் கறிகள் சுவையானவை என்று மனுஷிக்குக் கேட்காமல் கூறிவிட்டு, சிவாவின் கண்கள் லிங்கம் மனைவியின் கையிலுள்ள சாப்பாட்டுக் கிண்ணத்தில் விழுகிறது. மிஸிஸ் லிங்கத்தின் வடை எங்கடை சனங்கள் மத்தியிலை வலு பிரசித்தம். அவர்களுடைய மகள் ராணி வடிவான பிள்ளை. சிவாவின் மகள் சுபாவிலும் ஒரு வயசு இளையவள்.

'அங்கிள், சுபா எங்கை?'

'அவ பிரண்ஸ்களோடை பார்ட்டி எண்டு போனவ... இப்ப வந்துவிடுவா...!' என்று சிவா சமாளித்தார்.

நல்ல வேளை. தனது மகள் வெள்ளைக்கார சினேகிதிகளுடன் வெளியில் போனவ, பன்னிரண்டு மணிக்குப் பிறகுதான்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவையள் இங்கு டினருக்கு வரக்கூடும் என்று மிஸிஸ சிவா பெருமையுடன் சொன்னபோது இவர்கள் இல்லை. இந்த முரண்பாடுகளை கடதாசி பசாரித்து போடுவது போல, நாங்கள் மறக்க பழகிக் கொண்டிருப்பது ஒரு வரப்பிரசாதமாகும்.

லிங்கம் குடும்பத்தினர் முகத்தில் ஏமாற்றம். மற்றவர்களை பிள்ளைகளுடன் வரச் சொல்லிவிட்டு தனது மகளை வெள்ளைக்காரர்களுடன் அனுப்பியது ஒரு கவுரவக் குறைவு போல் தெரிகிறது. சிவாவின் மகளுக்கு வெள்ளைக்கார நினைப்பு. அவள் அதிகம் நம்மவர்களுடன் பழகுவது தகப்பனுக்கு பிடிக்கவில்லை என்று மிஸிஸ் சிவா இரண்டொரு இடத்திலே சொல்லி இருக்கிறாவாம். நாங்கள் போகும் நேரங்களில் சுபா வெளியில் வருவதே கிடையாது.

ராணி பாவம். இன்னமும் எங்கடை சனங்களோடை தமிழில்தான் கதைக்கிறாள். தாய்க்கு இங்கிலீஸ் தெரியாததால் தமிழ் தப்பியது.

பக்கத்து வீட்டு வெளிச்சத்திலும் 'சமர்' கால மாலை வெய்யிலிலும் காட்ஸ் விளையாட்டு துவங்கியது.

சிவா வீட்டு முன்பக்க 'பல்ப்' எரியத் தொடங்கியது. ஏதோ சமிக்ஞையைக் கண்டவர் போல, 'இனிச் சாப்பிடுவம்... சூட்டோடை சாப்பிட்டாத்தான் ருசி...' என்று சிவா சொன்னார். சாப்பாடும் வெளியிலேயே நடக்குது.

'கத்தரிக்காய் கறி ஆர் செய்தது? நல்லாயிருக்கு.'

'வேறை ஆர்? கமலாதானே அதிலை ஸ்பெஷலிஸ்ட்!'

'இன்டைக்கு அவசரத்திலை சமைச்சதாலை அவ்வளவு சரிவரல்லை...' என்று கமலா நெளிந்தாள்.

'சரி வராததே இவ்வளவு ரேஸ்ற் எண்டால், சரி வந்திருந்தால் ஒரு கலக்கு கலக்கியிருக்கும் எண்டு சொல்லிறியள்...' எனக்கு இப்பிடி ஏதாவது சொல்லாவிட்டால் வாய் புளிச்சுப் போகும்,

'திஸ் இஸ் மில்க் சொதி. திஸ் இஸ் தாளிச்ச சொதி. ரேக் விச்செவ யூ லைக்.' —இது மிஸிஸ் சிவா.

பிரிட்டிஷ் பிரஜைகளாக இருந்து இங்கு குடியேறிய மகா குடும்பம் வருகின்றது.

'வீ ஆர் கம்மிங் ஒன் ரைம்' தமிழில் கதைத்தால் அவர்கள் லண்டனிலிருந்து 'துறா மெயிலில்' இங்கு வந்தவர்கள் என்பதை நாங்கள் அறிவது எப்படி?

□ □ □

'டார்லிங் கார்பருக்கு போவோமே. இப்ப போனால் ஃபயவேக்ஸ் பாக்கலாம்.' சாப்பாடு முடிய சிவா கேட்டார்.

'இதுக்கு முந்தி போயிருக்கிறியளே?'

'இல்லை. நீர் போனீரே?'

'ஓமோம். இண்டைக்கு அங்கை பல அடிதடிகள் குத்து வெட்டுகள் எல்லாம் நடக்கும். ஏன் கொலையும் விழலாம்.'

'அப்பிடியோ?' மனம் பதை பதைப்பதை சிவாவால் மறைக்க முடியவில்லை.

'சனியன்கள். குடிச்சுப் போட்டு பன்னிரண்டு மணிக்கு வருஷம் பிறக்க, பக்கத்திலை ஆர் இருந்தாலும் கட்டிப்பிடிச்சு கிஸ் பண்ணி... அந்தக் கூத்து படு கேவலமல்லே...'

வந்த புதிதில் டார்லிங் கார்பருக்கு வருஷப் பிறப்புக்குப் போய் மாட்டுப்பட்ட கதையை விலாவாரியாக லிங்கம் மனைவி விளங்கப் படுத்துகிறார்.

சிவானந்தம் அக்கறையாக டார்லிங் கார்பரைப் பற்றி ஒவ்வொருவராக விசாரிக்கிறார். அவர் முகத்தில் வாட்டம் தெரிகிறது சிலவேளை இவருடைய மகள் சிநேகிதிகளுடன் டார்லிங் கார்பர் சென்றிருக்கலாம். அங்கு ஒரு வெள்ளைக்கார தடியன் இவர் மகளை போதையில் கட்டிப்பிடித்து கிஸ் குடுக்கும் காட்சி இவர் மனதில் விழுந்திருக்கலாம்... இப்படி நினைச்சுப் பார்க்க எனக்கு வந்த சிரிப்பை, நாகரீகம் கருதி அடக்கிக் கொண்டேன்.

லிங்கம் மனுஷியின் கதைக்குப் பிறகு சிவா ஊமையானார். ஒம்பதரை மணிக்கு சாப்பாடு முடிஞ்ச கையோடு லிங்கம் குடும்பத்தினர் எழும்பி விட்டனர்.

'ராணிக்கு தனிய இருக்க விசராயிருக்காம்... அப்ப நாங்கள் வாறம்...'

'சுபா இப்ப வந்து விடுவா. கொஞ்சம் பொறுத்துப் போகலாம்...' என்று சிவா மௌனத்தை கலைத்து இழுத்தார். ஆனால் அவர்கள் போய்விட்

## பூச்சூடுவது எப்படி?

என் மருமகன் பாடசாலையிலிருந்து திரும்பும்போது, வலப் பக்கப் பின்னலிலே பூச்சூடி வந்தாள். 'எப்பொழுதம்மா உனக்குக் கல்யாணமானது?' என்று பாட்டி தன் பேத்தியைக் கேலி செய்யத் தொடங்கிவிட்டாள். கல்யாணமானவர்கள் கணவனை வலப் பக்கம் வைத்துக் கொள்வதாகவும், அதற்கு அடையாளமாக வலப் பக்கமாகப் பூச்சூடுவது என்றும் உள்ள வழக்கத்தை பாட்டி விளக்கப் படுத்திய பின்தான் என் மருமகள் அன்றிரவு நிம்மதியாக தூங்கச் சென்றாள்.

—ஆர். பா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டார்சுள். சுபா வர பண்ணிரன்டாகும் என்று அவர்கள் அனுமானித்திருக்கலாம். பிறகு குணபாலனும் எழுந்தார்.

'லெவன் தேர்ட்டிக்கு சாயி சென்டரில் பஜன் தொடங்குது. இப்ப போனால்தான் வெளிக்கிட்டு போக சரியாயிருக்கும்.'

'இங்கையிருந்து நேரே போகலாம்தானே?'

'இப்படியேயோ?' என்ற மிஸிஸ் குணபாலன், நாணத்தை நாணச்செய்யும் சிரிப்பு ஒன்றைத் தன் முகத்திலே அப்புகிறா.

இந்தச் சாதாரண உடுப்போடு பஜனைக்கு போவது எவ்வளவு சிரிப்புக்கிடமான விசயம் எண்டது சிலருக்கு தெரியாது. சாய்பாபா அருள் இல்லாவிட்டால், நமது பெண்களுடைய பட்டு புடவைகள் பவிசு மங்கித் தூங்க வேண்டியிருக்கும்.

பன்னிரண்டு மணி மட்டும் இருந்தால் தாங்கள் வேலை இல்லாதவர்கள்எண்டு நினைத்து விடுவார்களோ என்ற பயம் மற்றவர்களுக்கு. சாப்பிடுகிறதும் ஒரு வேலைதான் என்பது இங்கு பலருக்குத் தெரியும்.

'காலமை வெளிக்கிட்டது. வீட்டுக்கு விளக்கும் வைக்கயில்லை. புது வருஷத்துக்கு விளக்கேத்தாமல் இருக்கிறது சரியுமில்லை' என்றபடி புது வீட்டு மூர்த்தி எழும்பினார். அவருக்கு அருகில் இருந்த நாங்களும் அவரை தொடர்ந்தோம்.

லண்டன் குடும்பம் மட்டும் ஒன்பதுக்கு வந்து ஒன்பதரைக்கு போறது நாகரீகமில்லை எண்டு நினைத்தார்களோ, என்னவோ!

மொத்தத்தில் புது வருஷம் பிறக்கமுதலே கொண்டாட்டம் முடிவுற்றது. சம்பெயின் போத்தல்கள் திறக்கப்படாமலேயே பெரிய ஏமாற்றத்துடன் சிவாவை பார்ப்பது போல எனக்கு தோன்றியது.

அடுத்த வீடு வெள்ளைக்காரக் குடும்பம். அவர்களும் டார்லிங் கார்பருக்கு புறப்பட்டு விட்டார்களோ? அங்கிருந்து சிவா முற்றத்திற்கு ஒளி பரப்பிய விளக்குகள் சில அணைந்தன...

இதனாலும், சிவாவின் முகத்திலேயே நிழல் படிந்தது போல ஒரு கோலம்...

டார்லிங் கார்பரில் வெள்ளைக்கார தடியனின் பக்கத்திலே, அமர்ந்திருக்கக்கூடிய சுபாவை நினைத்தாரோ...

திருவாட்டியிடம் 'டொனேஷன்' வாங்கியபொழுது அடகு வைத்த சுதந்திரத்தை மீட்டெடுப்பதன் மூலம்தான் சுபாவின் எதிர்காலத்தை அழிவிலிருந்து தடுக்கலாம் என்று நினைத்தாரோ...

மெய்யாக அவரை பார்க்க பாவமாக இருந்தது...

புது வருஷம் பிறப்பதற்கு நேரம் தாராளமாக இருக்கு! □


**KUMARAN BOOK CENTRE**

□

SRI LANKAN AND INDIAN MAGAZINES, NEWS PAPERS, CINE-PUBLICATIONS

□

TAMIL AUDIO CASSETTES

□

SRI LANKAN FOOD PRODUCTS

□

**திசை** பத்திரிகை விற்பனையாளர்

□

வெளிநாட்டில் வாழும் உங்கள் உறவினர்-நண்பர்களுடன் உடனுக்குடன் FAX மூலமாக எளிதிலே தொடர்பு கொள்ள, 24 மணி நேரமும் மகிழ்ச்சியுடன் சேவை செய்யக் காத்திருக்கிறோம்.

□

**KUMARAN BOOK CENTRE**

1, TOWER HAMLET ROAD. LONDON E17 4RQ

Tel 01-520-5960 Fax 01-521-9482

K. MAHESWARAN




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாயக மண்ணில்...

**என்னதான்** தொலைதூர தேசங்களில் கொடி கட்டிப் பறந்தாலும் சொந்த மண்- தாயகமண் - என்று வந்தால் மனதில் ஏற்படுகிற சிலிர்ப்பே தனிதான். அதிலும் நமக்கு பெற்ற தாயும் பிறந்த நன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்த தாயிற்றே!

நாடோடிகளாகி விட்ட நமக்கு, தாயக மண்ணில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்வதில் உள்ள ஆர்வத் துடிப்பு அணைகடந்த வெள்ளம்.

அந்த ஆர்வத்துக்கு இரையாக ஓரளவாவது துணைபோகவே இந்த **தாயக மண்ணில்.**

நமது வாழ்வும் வளமும் அவலத் தொடர்கதையாகி விட்ட நிலையில் தாயக மண்ணில் இருந்து ஆனந்தச் செய்திகள் வர இன்னும் காலம் கனியவில்லை.

இதனை எழுதத்துவங்குகிற நேரத்தில் வட இலங்கையில் யாழ்ப்பாணக் குடா நாட்டை மட்டும் தனிமைப்படுத்தி கால வரம்பற்ற ஊரடங்கு உத்தரவை அமலுக்குக் கொண்டு வந்து மனித வேட்டைக்கு சிங்கள ராணுவம் கிளம்பிய செய்தி வந்து கொண்டிருந்தது.

எல்லா முனைகளிலும் தோல்விகளையே சுமந்த சிங்கள படையினர் யாழ்ப்பாணத்தில் புதிதாகத் துவங்கியுள்ள வெறியாட்டத்தின் மூலம் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி வெற்றி கண்டு விடவா முடியும்?

கடந்த ஒரு மாதத்துக்குள் இலங்கையின் முப்படையினரும் வட இலங்கையில் குறிப்பாக மன்னார்க்குடாவிலும், வவுனியாவில் தாண்டிக் குளம் பகுதியிலும் கட்டவிழ்த்து விட்ட கயமைத் தனம் ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை பலிகொண்டு விட்டது. மன்னாரில் மந்தை, நானாட்டான் பகுதிகளில் தான் நிலைமை மோசமாக இருந்தது. தனது தரப்பிலும் சில நூறு வீரர்களை இழந்ததாக கூறும் இலங்கை இராணுவம் தான் கொன்று குவிப்பவர்களை எல்லாம் ஈழப்புலிகளாக்கி எண்ணிக்கை காட்டுகிறது.

இலங்கை அரசுக்கும் சரி, அதன் இராணுவத்துக்கும் சரி இப்போதைய சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் பிறகு எப்போதுமே தமிழ் மக்களை வெல்ல முடியாது என்ற எண்ணம் வந்து விட்டது போலிருக்கிறது. அதன் பாதிப்பாக வடக்கில் பல உயிர்கள் அநியாயமாகப் பலியாகி வருகின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு பரிகாரமாகாது என்று நாள் தவறாமல் கூறிவருகிறார் அதிபர் பிரேமதாச. ஆயுதபலத்தின் மூலம் ஏற்படும் தீர்வு நிரந்தரமானதல்ல என்கிறார். உலகில் எங்குமே ஆயுதபலம் வெற்றி பெற்றதில்லை என ஓயாமல் ஓதிக் கொண்டிருக்கிறார்.

ஆனால், பிறகு ஏன் அவர் தனது ராணுவத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்?

எல்லாம் இந்த இந்தியத் திடீர் தேர்தலின் விளைவுதான்.

இந்தியாவில் எல்லோரது கவனமும் இந்தத் தேர்தலில் திசை திரும்பியிருப்பதால் உலகப் பிரளயமே வந்தாலும் அவர்கள் கவனிக்க மாட்டார்கள்; இலங்கையில் தமிழர்களை இந்த சமயம் பார்த்து வெட்டிக் கொன்றால் யாரும் கண்டு கொள்ளவும் மாட்டார்கள் என்ற நினைப்பில்தான் இலங்கை அரசும் சிங்கள ராணுவமும் இப்படி வெறியாட்டம் போடுவதாக நினைப்பவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் பிரேமதாசாவுக்கு சிந்தனை வேறு விதமாகவும் இருக்கக்கூடும். வரும் இந்தியத் தேர்தலில் ராஜீவ் காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் கட்சியே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என்று அவர் பூரணமாக நம்புகிறார். மீண்டும் ராஜீவ் பிரதமரானால் தனக்கு தொல்லைதான். இலங்கைப் பிரச்சினையில் அவர் ஓயாமல் சீண்டிக் கொண்டிருப்பார். எனவே ராஜீவுக்கு இலங்கை விவகாரத்தில் தலையிட மற்றொரு வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுத்துவிடக் கூடாது என்பது அவரது எண்ணமாக உள்ளது. எனவேதான் இந்திய தேர்தல் முடிவதற்கு முன்பாக தமிழ் மக்களை ஒரு வழிபண்ணி விட அவர் முயலுகிறார் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

பழைய கெடுபிடிகளைக்கூட அவர் இப்போது கைவிட்டு விட்டார். அதாவது ஈழப்புலிகளின் தலைவர் பிரபாகரனே நேரில் வந்தால்தான் பேசுவேன்; ஈழப் புலிகள் ஆயுதங்களை எல்லாம் அரசிடம் ஒப்படைத்துவிட்டு வந்தால்தான் பேச்சு என்றெல்லாம் கூறிவந்தவர் அந்த நிபந்தனைகளை எல்லாம் கைவிட்டு விட்டார்.

இப்போது ஒன்றை மட்டும் பிடித்துக் கொண்டிருக்கிறார். அத்தகைய சமாதானப் பேச்சில் இதர தமிழ்ப்போராளிக் குழுக்களும் கலந்து கொள்ள புலிகள்

## தமிழ்ப் பகுதிகளில் தொடர்ந்து படுகொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடம் தரவேண்டும் என்பது தான் அது.

பிரேமதாசாவின் எதிர்பார்ப்புகள் எந்த அளவுக்கு நிறைவேறும் என்று தோன்றவில்லை. என்றாலும் அடுத்த 'அக்கினிக் குஞ்சு'வில் நாம் சந்திக்கு முன் ஏதேனும் நடக்கலாம் என்பதற்கான அறிகுறிகளை அவதானிக்க முடிகிறது.

அப்பாவித் தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் நாளுக் பொழுதும் பலியாகிக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் பாரம்பரிய தமிழ் மண்ணையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோம் போலிருக்கிறது.

'யாழ்ப்பாணத்தை விட்டுக் கொடுத்தாலும் திருகோணமலையை விட்டுக் கொடுக்க மாட்டோம்' என்று முழங்கினோமே உங்களுக்கு நினைவிருக்கிறதா? அந்த முழக்கத்திற்கு நேர் விரோதமாகவே காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

திருகோணமலை ஏறக்குறைய முழு அளவில் சிங்களவர் மயமாக்கப்பட்டுவிட்டது. சமீப காலத்தில் அங்கு ஏராளமான சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டு விட்டனர்.

திருகோணமலையில் மறுவாழ்வுப் பணிகளில் இலங்கை அரசு அளவுக்கு மீறிய ஆர்வம் காட்டிய போதே இதில் ஏதோ விஷமம் உள்ளது என்று நினைத்தது சரியாகி விட்டது.

வடக்கு, கிழக்கு மாகாண சபையை விட ஏனைய மாகாண சபைகள் அனைத்தும் திருகோணமலையில் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தங்களால் முடிந்த பணிகளை செய்ய சந்தர்ப்பம் தரப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அச்சபைகள் ஏராளமான வீடுகளைக் கட்டி விட்டன.

அவ்வீடுகளில் 65 சதம் சிங்களவர்களுக்கு. 25 சதம் தமிழ் மக்களுக்கு. 10 சதம் முஸ்லிம்களுக்கு. ஆனால் அங்கு தமிழ் மக்கள் குடியேறியதாகத் தெரியவில்லை. நீங்களே ஊகித்துக் கொள்ளுங்களேன்.

இதனை எழுதத் துவங்கிய போது கொழும்பில் பாதுகாப்புப் படையினர் உஷார் படுத்தப்பட்டு, கூப்பிட்ட குரலுக்கு உடன் ஆஜராகக் கூடியதாய் தயார்நிலையில்வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புத் துறைச் செயலர் சிறில் றணதுங்க அறிவித்த செய்தி வெளிவந்தது.

திடீரென்று ஏன் இந்த ஏற்பாடு?

ஈழப்புலிகளின் தற்கொலைப் படை கொழும்பில் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தகவல் வந்துள்ளது. எனவே தான் கொழும்பில் மூலைக்கு மூலை ராணுவத்தை நிறுத்த முனைந்துள்ளோம் என்று அவரே சொல்கின்றார்.

சில சமயங்களில் இப்படி விஷமத்தனமாக ஏதேனும் சொல்லி அல்லது செய்து சிங்கள மக்களை கொதிப்படையச் செய்ய வேண்டும் என்பது தான் அவரது நோக்கம் என்று நமக்குத் தோன்றுகிறது.

இதற்கு என்ன காரணம் என்று கேளுங்கள்.

மொனராகலைப் பகுதியில் ஆயுதந்தாங்கிய சுமார் 30 பேரடங்கிய ஒரு குழு கிராமங்களில் 28-30 பேரை கண்டதுண்டமாக வெட்டிக் கொன்று குவித்து விட்டதாம். ஈழப் போராளிகள் தான் இதனைச் செய்தனர், என சுலபமாக சிறில் பழி சுமத்தி விட்டார். முப்படைகளையும் முடுக்கி விட்டும், மொனராகலை காடு மேடெல்லாம் தேடியும் யார் இப்படு கொலைகளைச் செய்தது எனக் கண்டு பிடிக்க இலங்கை அரசுக்குத் துப்பில்லை.

இப்போது புலிகள்கொழும்பைத் தாக்கப்போகிறார்கள் எனப் புரளி கிளப்பி விடப்பட்டுள்ளது.

மொனராகலைப் பகுதி கொலைகளைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பரரவெல என்ற றப்பர் தோட்டத்திலே புகுந்து சிங்களக் காடையர்கள் தங்கியிருந்த தமிழ்த் தொழிலாளர்களை அடித்து நொறுக்கி, சிலரைக் கொன்று இரு லயன்களையும் கொளுத்தி மக்களை அகதிகளாக்கி விட்டனர்.

அரசு கண்டு கொண்ட மாதிரி தெரியவில்லை.

இலங்கையிலும் ஒரு 'குட்டிப் பொதுத் தேர்தல்' நடக்கிறது என்ற செய்தியுடன் நிறுத்திக் கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

வடகிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த நாட்டின் இதரப் பகுதிகளில் வரும் மே 11 ம் தேதி 10 மாநகர சபைகள், 33 நகரசபைகள், 194 பிரதேச சபை களுக்கு தேர்தல் இடம் பெறுகிறது.

வடக்கு கிழக்கில் உள்ள 2 மாநகரசபைகள், 6 நகரசபைகள், 63 பிரதேச சபைகளுக்கு?

இப்போது என்ன அவசரம் என்கிறது இலங்கை அரசு.

**தமிழீழத்தில்** உள்ள விலை வாசிகள் ஏப்ரல் இறுதியில் எப்படி இருந்தது என்பதற்கு ஒரு மாதிரிப் பட்டியல் இது.

| | | |
|---|---|---|
| **பெற்றோல்** | | **ரூ.** |
| **ஒரு போத்தல்** | | **1000-00** |
| **எஞ்சின் ஒயில்** | ,, | **500-00** |
| **ம. எண்ணெய்** | ,, | **50** |
| **அரிசி ஒரு கிலோ** | | **31** |
| **மா** | ,, | **24** |
| **செத். மிளகாய்** | ,, | **100** |
| **புளி** | ,, | **95** |
| **மல்லி** | ,, | **55** |
| **சீனி** | ,, | **34** |
| **தேசிக்காய் ஒன்று** | | **5** |
| **சவர்க்காரம் ஒரு கட்டி** | | **22** |
| **மோர் ஒரு போத்தல்** | | **10** |

**-கார். முரளீதரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உல்லாச வேளை

## யாழ். சுதாகர்

□ 'தை மாசம் பூவாசம்' வெற்றியைத் தொடர்ந்து நடிகர் ராதா ரவி முழு மூச்சாக தயாரிப்புத் துறையில்! அடுத்த படத்தில் கார்த்திக்-குஷ்பூ, 'வேலை கெடைச்சிடுச்சி', 'நடிகன்', 'சின்னத்தம்பி' என்று வரிசையாக வெற்றி கொடுத்த பி. வாசு இயக்கப் போகிறார்.

சினிமாவில் ஒரு ராசி. திடீரென துறையை மாற்றிக் கொண்டால் பழைய துறை நிரந்தரமாகவே நம்மை ஒதுக்கி வைக்க ஆரம்பிக்கும். சங்கிலி முருகன் தயாரிப்பாளரானார். நடிப்பு வாய்ப்புகள் குறைந்தன.

ஏதோ 'கேளடி கண்மணி' ஓடிச்சுது. உடனே அடடே நாமும் நடிக்கலாமே!...'' என்று ஆசை வந்தது எஸ். பி. பிக்கு இப்போது அவர் பாடத் தயாராக இருந்தாலும் பாதி வாய்ப்புக்கு மேல் மனோவுக்குப் போகிறது.

ஆனால் ராதாரவி அதிர்ஷ்டசாலி! தயாரிப்பாளரான போதும் அவரது படவாய்ப்புகள் குறைந்து போய்விடவில்லை. இது பற்றி ரவியிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் சொன்னார்.

''சினிமாவுல கான்சென்ட்ரேஷன் ரொம்ப முக்கியம். நான் புரொடியூசர் ஆனாலும் நடிப்புக்குன்னு ஒதுக்கின நேரத்திலே கரெக்டா செட்டிலே நிப்பேன். ஒன்னை ஒன்னு பாதிக்காத விதத்திலே நடந்துக்கறேன். இந்த பங்சுவாலிடியும் தொழில் ஈடுபாடும் என்னோட சக்ஸஸ்க்கு முக்கிய காரணம்னு நெனைக்றேன்''

□ 'நட்சத்திர இயக்குனர்' என்று பிரியமாக அழைக்கப்பட்ட ராஜசேகரின் திடீர்மறைவு தமிழ்ப்படவுலகுக்கு ஒரு பெரும் இழப்பு என்று தான் சொல்ல வேண்டும்.

நடிகர் திலகம், கமல், ரஜினி, சத்தியராஜ், விஜயகாந்த் என்று எல்லா முன்னணி நடிகர்களையும் இயக்கியவர். அதிக வெள்ளி விழாப் படங்களைக் கொடுத்தவர்.

'ஜனரஞ்சகத்தின் நாடித்துடிப்பை புரிந்து கொண்டு படமெடுப்பவர்' என்று கமலஹாசனாலும் இயக்குனர்களில் ஒரு மனிதன், என்று ரஜினிகாந்தாலும் பாராட்டப்பட்டவர். தாம் இயக்கிய 'கங்குவா' இந்திப் படத்தின் மூலம் வடக்கில் ரஜினிக்கு மிகப் பெரிய அங்கீகாரம் கிடைக்க காரணமாக இருந்தவர்.

'தர்மதுரை' வெற்றியை தொடர்ந்து... மம்முட்டியை இயக்கப் போகிறேன் என்று சொல்லி இருந்தார் அதற்குள் எமனின் இயக்கம்!

□ சமீப காலமாக பாண்டியராஜன் நடித்து வெளிவந்த எந்தப்படமுமே மூன்று வாரங்கள் கூட முழுமையாக ஓடியதில்லை போதாக்குறைக்கு அரசியலில் வேறு சேர்ந்து பெயரைக் கெடுத்துக் கொண்டார். திராவிட மேடைகளில் இனமான உணர்வு, இந்தி எதிர்ப்பு என்றெல்லாம் முழுங்கித் தள்ளினார். என்ன பிரயோஜனம்? தியேட்டரில் கூட்டம் இல்லையே...

பார்த்தார் பாண்டியராஜன். இந்திக்கு இடம் மாறினார். ஆரம்பகால வெற்றிப்படமான ஆண்பாவத்தை இந்தியில் இயக்கி நடித்துக் கொண்டிருக்கிறார்.

இதில் இன்னொரு வேடிக்கை. கமலோ ரஜினியோ ஸ்ரீதேவியோ தமிழில் இருந்து இந்திக்குப் போனபோது தமது பெயரை மாற்றிக் கொள்ளவில்லை, ஆனால் இந்தி ஸ்டைலில் 'பாண்டேராஜ்' என்று தமது பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறார் பாண்டியராஜன். வாழ்க இன மான உணர்வு!

□ 'கேப்டன் பிரபாகரன்' சக்கைப்போடு போடுகிறார். அதற்கு முன்பு, தணிக்கையில் இருந்து இப்படத்தை வெளியே கொண்டு வருவதற்குள் விஜயகாந்த் பட்டபாடு சொல்லி மாளாது. 'பிரபாகரன்' என்ற வார்த்தையைத் தூக்கியே ஆக வேண்டும் என்ற டெல்லிகளின் நிர்ப்பந்தம் விஜயகாந்தின் பிடிவாதத்தில் தகர்ந்து போனது இன்று திரையிட்ட இடமெல்லாம் 'துப்பாக்கி மழை' பொழிகிறார் பிரபாகரன்!

ஆனால் டி.வி.யிலும், வானொலியிலும் 'கேப்டன் பிரபாகரன்' பாடல்களைப் போட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மறுப்பதாக சேதி.

இதுபற்றி விஜயகாந்திடம் கேட்டபோது...அவர் சொன்னார்.

'சட்டம் ஒரு இருட்டறை' படத்தில் புலிச் சின்னம் பொறித்த பனியன் அணிந்திருப்

### வயன் டெனிஸ்-தமிழ் நட்புறவுச் சங்க ஆண்டு விழா

டென்மார்க்கில் வாழும் ஈழத் தமிழர்களின் அமைப்புகளில் வயன் டெனிஸ்-தமிழ் நட்புறவுச் சங்கம் சிறப்பான பணியாற்றி வருகின்றது.

இச் சங்கத்தின் ஓராண்டு நிறைவையொட்டி வரும் 20-4-1991-ல் ஆண்டு விழா நடைபெறவுள்ளது. அவ்விழாவில் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா மலர் வெளியிடப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேன்.

அந்தப்படத்தை இலங்கை பிலிம் கார்ப்பரேஷன் இறக்குமதி செய்திருந்தும் 'புலிபனியன்' என்கிற ஒரே காரணத்தைக் காட்டி அதைத் தடை செய்தது, சிங்கள அரசு. அதற்குப் பிறகு ரூபவாஹினியிலும், எனது பாடல்களுக்கு தடை வந்தது.

ஆனால் என்னாச்சு? என் மேலே இலங்கைத் தமிழர்கள் கொண்டிருந்த பாசம் இன்னும் அதிகமாச்சு. அதை இப்போது... மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். வெட்ட வெட்டத் தழைப்பது தான் தமிழ் ஜாதி!

பாவம்! சீப்பைப் பறித்துக் கொண்டால் கல்யாணமே நின்று போய்விடும் என்று கனவு காண்கிறார்கள் 'சிலபேர்!'

□ இவ்வாண்டு சிறந்த நடிகைக்கான தேசிய விருது ஐ.பி.எஸ். விஜயசாந்திக்குக் கிடைத்திருக்கிறது. இவர் பாரதிராஜாவின் 'கல்லுக்குள் ஈரம்' படத்தின் மூலம் அறிமுகமானவர். அதற்குப் பிறகு தமிழில் சரியான வாய்ப்புகள் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த விஜயசாந்திக்கு தெலுங்குப் படவுலகம் அடைக்கலம் கொடுக்க 'பூ ஒன்று புயலானது' மூலம் தெலுங்கில் சூப்பர் ஸ்டார் ஆனார்.

சென்ற ஆண்டு அவரது 'கர்த்தவ்யம்' தமிழில் வைஜெயந்தி ஐ பி.எஸ். ஆக டப் செய்யப்பட்டு வெளிவந்த போது இங்குள்ள சூப்பர் ஸ்டார்களின் பிரம்மாண்டங்களையெல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டது. பலருக்குக் காய்ச்சல் வந்ததாக கூடக் கேள்வி. இவர் ஐ.பி.எஸ். ஆக நடித்து வெளிவந்திருக்கும் மற்றொரு படம் 'சத்ரு!'

வைஜெயந்தி ஐ.பி.எஸ்.ஸின் இரண்டாம் பாகமோ என்று சொல்லும் அளவுக்கு— நடிப்பிலும் சண்டைக் காட்சிகளிலும் அசத்துகிறார் விஜயசாந்தி.

நிச்சயமாகச் சொல்லலாம். இப்போது ஓடிக்கொண்டிருக்கும் பல'தமிழ்ப்படங்களுக்குச் 'சத்ரு!'

ஒரு காலத்தில் காந்தாராவ் நடித்த 'மோகினி' வகையறாப் படங்களில் வந்து கவர்ச்சி நடனம் ஆடுவாரே விஜயலலிதா...(கன் பைட் காஞ்சனா), அவரது அக்கா மகள் தான் இந்த விஜயசாந்தி.

-5ம் பக்க தொடர்ச்சி

வலர் வட்டம்' ஒன்றினை நிறுவவும் ஏற்பாடுகளும் செய்துவருகின்றோம். 'அக்கினிக் குஞ்சு'வின் வட்டமும் பணிகளும் அகலித்தல் வேண்டும். எனவே, தமிழீழக் கலாசார-இலக்கிய நேசிப்பு உள்ள சகலருடைய பெயர்களும் - முகவரிகளும் கோவைப்படுத்தப் படுகின்றன. தயவு செய்து எங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். நீங்கள், சேது அணையை நிர்மாணித்த பொழுது உதவிய அணிற்குஞ்சு கணியமேனும் உதவ முடியாதா?

அந்த அணிலின் உதவியைக்கூட பெரிதாகக் கணக்கெடுக்கும் பக்குவம் நமக்கு உண்டு...

வணக்கம்.

## தனிப் பிரதி விலை

| | | |
|---|---|---|
| இலங்கை ... | ரூ | 6 - 00 |
| இந்தியா ... | ரூ | 3 - 00 |
| சிங்கப்பூர் ... | S$ | 4 - 00 |
| மலேசியா ... | M$ | 4 - 00 |
| அவுஸ்ரேலியா | A$ | 2 - 00 |
| டென்மார்க் ... | DKR | 10 - 00 |
| சுவீடன் ... | Kr | 10 - 00 |
| நோர்வே ... | NKR | 10 - 00 |
| அமேரிக்கா | $ | 1 - 00 |
| சுவிற்சிலாந்து | SFr | 2 - 50 |
| பிரான்ஸ் | FFr | 6 - 00 |
| பிரித்தானியா | £ | 1 - 00 |
| ஜேர்மனி | DM | 4 - 00 |
| கனடா | C$ | 2 - 00 |
| நியூசிலாந்து | NZ$ | 3 - 00 |
| சவுதி அரேபியா | RIS | 4 - 00 |
| பப்புவா நியுகினி | KINA | 1 - 50 |

தபால் செலவு தனி



## சென்ற இதழ் பற்றி...

'ஈழத் தமிழர் அரசியல்' வித்தியாசமான சுய சரித கட்டுரைத் தொடர். அதை நிறுத்தாமல் தொடர்ந்து வெளியிடுங்கள். அம்பியின் கவிதையை இன்னும் கொஞ்சம் அதிகம் பிரசுரிக்கலாமே! நியாயங்கள் மனதை உருக்கியது.

- ஆர். மணியன் நோர்வே

சாலையாரின் கட்டுரை அக்கினிக் குஞ்சுவுக்கு மகுடமாக இருந்தது. நல்ல-புதிய சிந்தனை.

- எஸ் பத்மநாபன் சுவிற்சிலாந்து

சென்னைக் கடிதம் நமக்கு மிகப் பயனுள்ள கட்டுரை, நிலைமைகளை அறிய முடிந்தது.

-கா. ஆனந்தன் டென்மார்க்

பிரபல எழுத்தாளர் மு. மேத்தாவின் புதுக் கவிதைகளை பல புத்தகங்களிலிருந்து எடுத்து அரைப் பக்கத்துள் அடக்கி விட்டீர்களே!

-பி. எஸ். நாதன் பிரான்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


WROUGHT IRON ARTICLES
WROUGHT IRON GATES & FENCING
WROUGHT IRON SECURITY DOORS & GRILLS
WROUGHT IRON MACHINES MANUFACTURE
ALUMINIUM & STEEL FENCING
ALUMINIUM DOORS & WINDOWS
SECURITY LOCKS
HOME REPAIRS & MAINTENANCE

இரும்புத் தளபாடங்கள்
இரும்பு 'கேற்'கள் - வேலிகள்
இரும்புப் பாதுகாப்புக் கதவுகளும் கிறில்களும்
இரும்பு மெஷின் தயாரிப்புகள்
அலுமீனியம் - உருக்கு வேலிகள்
அலுமீனியம் கதவுகளும் ஜன்னல்களும்
பாதுகாப்புப் பூட்டுகள்
வீட்டுத் திருத்த வேலைகள்

# RAS INDUSTRIES PTY LTD

QUALITY BY PERFORMANCE

FACTORY 4, 38 AMBERLEY CRESCENT
DANDENONG, VICTORIA 3175, AUSTRALIA
TEL (03) 706-7401 A H. (03) 793-5857



# ராஸ் இன்டஸ்ரீஸ் பிரைவேட் லிமிட்டட்

வேலைப்பாடுகளில் திறமை

தொழிற் கூடம் 4, 38 அம்பேர்லி கிறசென்ற்
டான்டெனொங், விக்டோரியா 3175, அவுஸ்ரேலியா
தொலைபேசி (03) 706 - 7401 (03) 793-5857

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# உங்கள் வாகன

திருத்த வேலைகள் எதுவாயினும்

உங்கள் திருப்தியே

எங்கள் சேவையாகும்



## Capital Autos

# CAPITAL AUTOS

311, SPROWSTON MEWS FOREST GATE, LONDON, E7 9AE

(REAR OF 311 ROMFORD ROAD)

TEL : 519-6187


Printed and Published by M.A. Rahman at ARprints, 375-8, Arcot Road, MADRAS 600 024 on behalf of PRIYA PUBLICATIONS, AUSTRALIA. Editor : YAL. S. BASKAR

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்